# விடுதலைப்புலிகள்

குரல் 14 | 1990 வைகாசி 15 | அன்பளிப்பு: 5 ரூபா


# மக்கள் சக்தியே எமது சக்தி!

## – தலைவர் பிரபாகரன்

**"இந்திய வல்லாதிக்கப் விடுத்த சவாலை வெற்றி கொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்றுகொண்டிருக்கிறது. மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும்வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்"**

**அன்னை பூபதியின் நினைவு நாளான (19-04-90) எழுச்சி நாளையொட்டி விடுத்த அறிக்கையில் தலைவர் வே. பிரபாகரன் இவ்வாறு கூறினார்.**


### தலைவர் பிரபாகரனின் அறிக்கை வருமாறு :

''எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே !

இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத் தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து, எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நிற்கிறோம்.

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக, வாழ்ந்துவந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத்துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.



அவரது தியாகம் ஒப்பற்றது, உலக வரலாற்றிலேயே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்தியத் தேசத்தைத் தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அதனால்தான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்புமுனைகளுக்கு முகம்கொடுத்து வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால், மிகவும் ஆபத்தானதென்றால், அது இந்திய

(11-ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் சின்னம்

*விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சின்னம் மூன்று நிறங்களைக் கொண்டது.*

*மஞ்சள் நிறமானது, தமது வழி வழித் தாயகத்தில் தமது சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழ், முஸ்லீம் மக்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் அறத்தின் பாற்பட்டது என்பதைச் சுட்டி நிற்கின்றது. சிவப்பு நிறம், சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கு, தமிழ் முஸ்லீம் மக்கள் மேற்கொண்டுள்ள புரட்சிகரப் போராட்டத்தைக் காட்டி நிற்கின்றது. கறுப்பு நிறம் மக்களின் மன உறுதியைக் குறிக்கின்றது.*

*இந்தச் சின்னத்தில் முக்கியமாக அமைந்திருப்பது எதுவெனில், மஞ்சள் நிறத்தில் உள்ள புலியின் தலையே! தமிழ்த்தேசிய வாதத்திலும் நாட்டுப் பற்றிலும் புலிச் சின்னம் வேரூன்றியுள்ளது. அதற்கு மேலாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அதன் அரசியற் கட்சியான விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிக்கும் இடையே உள்ள அரசியற் தொடர்ச்சியையும் அது குறிக்கின்றது.*

*தமிழர் தாயகத்தின் மூன்று முக்கிய தொழில் துறைகளும் இந்தச் சின்னம் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. உழவு, மீன்பிடி, கைத்தொழில் ஆகியவையே இம்மூன்று தொழில்துறைகளுமாகும்.*

*மஞ்சள் நிறத்தில் புலியின் தலைக்கு இரு பக்கங்களிலும் நெற்கதிர்கள் அமைந்துள்ளன. இந் நெற்கதிர்கள் தமிழ், முஸ்லீம் மக்களின் உயிர்நாடியான உழவுத் தொழிலைக் குறிக்கும். அத்துடன் தேசியப் போராட்டத்தில் உழவுத் தொழில் சார்ந்த தொழிலாளர்களை ஒன்றிணைப்பதையும் இத்தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடுவது என்ற கட்சியின் உறுதியையும் அது குறித்து நிற்கின்றது.*

### ஒரு விளக்கம்

*புலியின் கால்களைத் தாங்கி நிற்கும் கறுப்பு நிற நங்கூரத்தின் கீழ்ப்பகுதிகள்; மேற்குப் பகுதியையும், கிழக்குப் பகுதியையும் குறிக்க, நங்கூரத்தின் மேற்பகுதி வடதிசையை நோக்கி நீண்டு நிற்கிறது. இது பாரம்பரிய தமிழ்-முஸ்லீம் மக்களின் தாயகத்தை அண்டியுள்ள கடலில் பொதிந்துள்ள மீன் வளத்தின் குறியீடாக அமைகின்றது. நங்கூரம் கடல் வளங்களின் சிறப்பைச் சுட்டி நிற்கின்றது. மிகப் பெருந்தொகையினரான கடற்தொழிலாளரை தேசியப் போராட்டத்திலும் சமூக மாற்றத்திற்கான போராட்டத்திலும் இணைத்து அவர்களை ஒன்று திரட்ட வேண்டுமென்ற மக்கள் முன்னணியின் உறுதியை இது குறிக்கின்றது.*

*அரை வட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் சக்கரத்தின் இரு முனைகளும் நங்கூரத்தின் அடிப்பக்க இரு முனைகளிலும் தங்கி நிற்பது, கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைக் குறிக்கின்றது. அதே வேளை அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கு கட்சி கொண்டுள்ள ஆர்வத்தையும் அக்கறையையும் அது குறிக்கின்றது.*


## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு


www.eelamview.com

## புலிகளின் குரல்

# தமிழீழமும் - தமிழ்நாடும்

தமிழீழ மக்களும், தமிழ் நாட்டு மக்களும் வரலாற்று ரீதியாகவே இன உணர்வினால் இறுகப் பிணைக்கப்பட்டுள்ளார்கள்.

சிங்கள இனவாத அரசுகளினால் கடந்த காலங்களில் ஈழத் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு வந்து, அதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மைகளை உலகம் அறியச் செய்ததில் தமிழ் நாட்டிற்குப் பெரும் பங்குண்டு.

அத்துடன் தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து நிரந்தரமானதும், உறுதியானதுமானதோர் தோழனாக தமிழ்நாடு இருந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தமிழீழம் போராடியபோதும் அதே போன்று ஆதரவையும், உதவியையும் தமிழ்நாடு வழங்கியுள்ளது.

இந்திய நாட்டிற்குள் ஓர் அங்கமாக இருந்து கொண்டே இந்தியப் படைகளுக்கு எதிராக தமிழீழம் போராடியபோது தமிழ்நாடு, தமிழீழத்தின் பக்கமே நின்றது.

இன்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஒரு புதிய சூழலில் புதிய கனபரிமாணத்துடன் இருக்கிறது. ஒரு புறம் இந்திய மத்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கைக்கும், மறுபுறம் ஸ்ரீலங்கா அரசின் இனரீதியான அடக்குமுறைகளுக்கும் இடையில் தமிழீழம் இருக்கின்றது.

இந்திய அரசானாலும் சரி சிறிலங்கா அரசானாலும் சரி இரண்டுமே தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒடுக்கக் கங்கணம் கட்டி நிற்பது உலகம் அறிந்த விடயம்.

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் தற்போது ஒரு யுத்த நிறுத்த இணக்கமும், பேச்சு வார்த்தையும் இருக்கிறது என்பதற்காக, தமிழ்பேசும் மக்களுக்கெதிரான இனவாத நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு கைவிட்டுவிட்டது என்று அர்த்தம் இல்லை.

அதுபோல் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த இந்தியப் படைகள் இப்போது வெளியேறிவிட்டன என்பதற்காக இந்திய மத்திய அரசின் வெளியுறவுக்கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்று அர்த்தமில்லை.

இந்தச் சூழ்நிலையில் தமிழீழ மக்களின் விடிவிற்காகவும் உலக தமிழ் மக்களின் விமோசனத்துக்காகவும் நாம் எந்த நாட்டையும் நம்பியிருக்க முடியாது.

நாம் நம்புவதெல்லாம் எமது சொந்தப் பலத்தையும், சொந்தச் சகோதரர்களான தமிழ் நாட்டு மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவையும், அங்கீகாரத்தையுமே.

தமிழீழம் நடத்தும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தமிழ்நாடு அங்கீகரிக்க வேண்டும்.

அதை தமிழ்நாடு அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

அண்மைக் காலமாக தமிழ்நாட்டில் நடந்து வரும் மாற்றங்கள் எமது நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

★ தமிழ் இனப்படுகொலையைப் புரிந்துவிட்டு நாடு திரும்பிய இந்தியப் படைகளை தமிழ்நாடு வரவேற்கவில்லை.

★ இந்தியப் படைகளுடன் சேர்ந்து தமிழ்மக்களுக்குத் துரோகமிழைத்த துரோகக் கும்பல்களுக்கு தமிழ்நாடு இடம் கொடுக்கவில்லை.

★ தமிழ் நாட்டு சட்டசபையில் தலைவர் பிரபாகரனை அவமதிக்கும் வகையில் அமைந்த இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களின் அனாகரீகமான கருத்துகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு குரல் கொடுத்தது.

தமிழ் நாட்டின் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் தமிழின உணர்வுப் போக்கை தேச விரோத செயலென தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் வர்ணிக்கின்றனர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியினரைப் பொறுத்தவரை தமிழீழ மக்களைப் படுகொலை செய்த இந்தியப் படையைக் கண்டித்தால், அது தேச விரோத செயல்!

அதை ஆதரித்தால் அது தேசபக்தி.

ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழீழ மக்கள் மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் தேசப்பற்றை உதறித் தள்ளிவிட்டு தமிழினப்பற்றே மேலானது என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

தொடர்ந்தும், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு ஆதரவும், உதவியும் வழங்குவதுடன், நெருக்கடி நேரங்களில் தமிழீழமும் தமிழ்நாடும் அருகருகே கைகோர்த்து நிற்க வேண்டும்.

### கருத்துக்களை வரவேற்கின்றோம்!

''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையானது எமது இயக்கத்தினது கொள்கை விளக்கங்களையும், செயற்பாடுகளையும் சுமந்து வருகின்றது.

நாம் உருவாக்க விரும்பும் விடுதலை பெற்ற உன்னதமான சமூகத்தை கட்டி அமைக்கத் தேவையான கருத்துருவங்களையும், செயல்முறைகளையும் மக்களிடம் எடுத்துச் செல்லும் ஓர் ஊடகமாக இப்பத்திரிகை தொழிற்படும்.

அதாவது, எமது தாயகத்தின் விடுதலைக்காக மக்களை ஒன்று திரட்டி அவர்களை சமூக உணர்வுடன் கூடிய அரசியல் மயப்படுத்தப்பட்ட சக்திகளாக மாற்றி, எமது மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் ஒரு மேம்பாட்டைக் காண இப்பத்திரிகை பாடுபடும்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றவல்ல ஆற்றல் எமது மக்களிடம் உண்டு.

அவ்விதமான ஆற்றல்களை ஒருங்கிணைக்க நாம் விரும்புகின்றோம்.

இதற்கு உங்களது ஆதரவையும், ஒத்துழைப்பையும் கோருகின்றோம்.

அத்துடன் இப்பத்திரிகை தொடர்பான உங்களது அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் ஆக்கங்களையும் நாம் வரவேற்கின்றோம்.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஆசிரியர் குழு
''விடுதலைப் புலிகள்''
தலைமைச் செயலகம்
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
தர்மபுரம்
கிளிநொச்சி.


## கப்டன் ஆனந்தன்

இந்தியப் படை வெறியர்
உன் பிணத்தை
மாங்குளம் சந்தியில்
தொங்க விட்டார்கள்

ஆனந்தா!
கொலைகாரர்கள்
வெற்றி என்று
அதை நினைத்தார்களே -
அங்கேதான் அவர்கள்
தோற்றார்கள்

பாஞ்சாலங் குறிச்சியில்
புளிய மரத்தில்
வெள்ளைக்காரன் தொங்கவிட்ட
கட்டபொம்மனுக்கும்
உனக்கும்
என்ன வேறுபாடு?

ஆனந்தா!
நேற்று வெள்ளையன்
தனக்குச் செய்ததை
இன்று
இந்தியா
உனக்குச் செய்தது.



(சு. கருணாகரன்-செம்மலை)
வீரமரணம் : 05-10-1989

## மலையகம் வாழ் தமிழ் மக்கள் நாடு கடத்தப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

ஓர் இலட்சம் மலையகம் வாழ் தமிழ் மக்களை கட்டாயமாக நாடு கடத்த இலங்கை அரசு மேற்கொண்டு வரும் முயற்சிக்கு பலத்த ஆட்சேபத்தையும், கண்டனத்தையும் தெரிவித்து எமது கட்சியாகிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி 09-05-1990 அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையின் விபரம் வருமாறு.

கடந்த கால ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கையில் எஞ்சியிருக்கும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை உடன் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்காவின் பெருந்தோட்டத் துறை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயவர்த்தனா அண்மையில் தெரிவித்திருந்தார்.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் இலங்கையின் குடிமக்களே இவர்கள் அனைவருக்கும் இந்நாட்டின் குடியுரிமை உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

இவர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பும் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டும்.

மலையகத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு முந்திய இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரும் இந்த மண்ணில் பிறந்தவர்களே.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இந்நாட்டைச் சுரண்டவரவில்லை. எத்தனையோ சொல்லொணாக் கொடுமைகளுக்கும், இனப்படுகொலைகளுக்கும் மத்தியில் இந்நாட்டை வளமாக்கியவர்கள். இவர்கள் தாமாக விரும்பி இந்தியா செல்லவில்லை.

இந்தியா செல்லக்கட்டாயப் படுத்தப்பட்டார்கள். இவர்களைத் திருப்பி அனுப்பச் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இந்த மக்களைக் கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டவையே.

ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தம் செயலிழந்து செத்துவிட்டதைப்போலவே இந்தப்பழைய ஒப்பந்தங்களும் செல்லுபடியாகாதவை.

இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில், இந்த மக்களின் ஒரு பகுதியினரை இந்தியா செல்லுமாறு கட்டாயப்படுத்துவதை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

www.eelamview.com

# சுயநிர்ணய உரிமையும் ஆறாவது சட்டத்திருத்தமும்

## ஒரு கண்ணோட்டம்

*அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கி விடுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, சிறீலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் இறங்கி, தேர்தலில் முகம் கொடுப்பதாக இருந்தால் இந்தச் சட்டத் திருத்தம் அகற்றப்பட வேண்டுமென முன்நிபந்தனையை நாம் விதித்திருக்கிறோம். ஆறாவது சட்டத் திருத்தமானது தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படையான அரசியற் சுதந்திரங்களை மீறுவதாக அமைவதுடன், எமது தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் ஆப்பு வைக்க முயல்வதால், இது நீக்கப்பட வேண்டுமென்பது புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு.*

*முன்பு ஆறாவது சட்டத் திருத்தத்தை வன்மையாக எதிர்த்த தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் இத்திருத்தத்தின் கீழ் சுய நிர்ணய உரிமையைக் கைவிட்டதாகச் சத்தியப்பிரமாணம் எடுத்து இன்று பாராளுமன்ற நாற்காலிகளில் வீற்றிருக்கின்றன. விடுதலைப் புலிகள் இயக்கம்மட்டுமே இச்சட்டத்திருத்தத்தை எதிர்த்து நிற்கிறது. இத்திருத்தத்தை நீக்கிவிட வேண்டுமென அரசை வலியுறுத்துகிறது. இந்தச் சூழ்நிலையில் ஆறாவது சட்டத்திருத்தத்தின் அரசியல் வரலாற்றுப் பின்னணியையும், அதன் பாதகமான அம்சங்களையும் இக்கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.*

### சோல்பரி அரசியல் திட்டம்

இலங்கைத் தீவிற்கு 1948ம் ஆண்டு பிரித்தானியா சுதந்திரம் வழங்கியது. இதற்குமுன் 'சோல்பரிப் பிரபுவின்' தலைமையிலான ஓர் ஆணைக்குழு விசாரணைகள் மேற்கொண்டு வழங்கியஅறிக்கையின் அடிப்படையில், ஓர் அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டது. இது பொதுவாக 'சோல்பரி அரசியல் திட்டம்' என்று அழைக்கப்பட்டது. இதுவே இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டபின் நடைமுறையில் இருந்த அரசியல் யாப்பாகும்.

1970 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழம் தவிர்ந்த ஏனைய சிங்கள நாட்டு வாக்களிப்பின் அடிப்படையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கொம்யூனிஸ்ற் கட்சி (மொஸ்கோ பிரிவு) ஆகியவை இணைந்து அமைத்துக் கொண்ட இடதுசாரி ஐக்கிய முன்னணி மிகப் பெரும்பான்மையான பாராளுமன்றத் தொகுதிகளைக் கைப்பற்றியது.

### 1972-ம் ஆண்டின் யாப்பு

தமிழீழத்தில் தமிழரசுக் கட்சி பெரும்பான்மைக் கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் மிகப் பெருமளவில் இருந்த சாதகமானநிலையைப்பயன்படுத்தி, திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களையே உறுப்பினர்களாகக் கொண்ட அரசியல் நிர்ணய சபையை அறிவித்தது. அதன்படி இப்பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையில் ஒரு புதிய யாப்பு நிறைவேற்றப் பட்டது. இதுவே 1972ம் ஆண்டின் யாப்பு என அழைக்கப் பட்டது. இதன் பிரதான மாற்றமாக முன்னைய யாப்பின்படியான ஆளுநர் நாயகம் (Governor General) பதவி நீக்கப்பட்டு குடியரசுத் தலைவர் (President) ஒருவர் அரசாங்கத் தலைவராக நியமிக்கப் பட்டார். இந்த அரசியல் யாப்பு பாராளுமன்ற உறுப்பினர்களினாலான அரசியல் நிர்ணய சபையினால் தயாரிக்கப்பட்டதெனக் கூறப்பட்ட போதிலும் தமிழீழத்தின் மிகப்பெரும்பான்மைக் கட்சியான தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்தும் வெளியேறினர். இதனால் 1972ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பு தமிழர்களும் சேர்ந்து தயாரிக்காத ஒருதலைப்பட்சமாக, சிங்களவரினால் தமிழர் மீது திணிக்கப்பட்ட யாப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

### 1978-ல் புதிய அரசியல் யாப்பு

இதன் பின் 1977 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான யூ.என்.பி.யும், தமிழீழம் தவிர்ந்த சிங்கள நாட்டில் மிகப் பெரும் வெற்றியீட்டியது. தமிழீழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றியீட்டியது. 1977 ல் நடைபெற்ற தேர்தலில் சிங்கள நாட்டில் 1970 ல் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஈட்டிய பெருவெற்றியிலும் கூடிய மிகப்பெரு வெற்றியை யூ.என்.பி. பெற்றது. இவ்வெற்றியை திரு. ஜெயவர்த்தனா பயன்படுத்திப் பாராளுமன்ற உறுப்பினர்களையே ஒரு அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாகவும் மாற்றி, 1978ல் இன்னொரு புதிய அரசியல் யாப்பை உருவாக்கினார். இந்த அரசியல் யாப்புத் தயாரிப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. மீண்டும் ஒரு முறை தமிழர்களின் சம்மதமின்றி சிங்கள நிரந்தரப் பெரும்பான்மையினரால் தமிழர் மீது ஒரு புதிய யாப்புத் திணிக்கப்பட்டது. இதுவே இன்றுவரை நடைமுறையிலுள்ள யாப்பாகும்.

### பதினெட்டுத் திருத்தங்கள்

யூ. என். பி. அரசிற்கு மிகப் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த காரணத்தினால் இந்த யாப்பின் ஏற்பாடுகளிற்கமைய பாராளுமன்றத்தில்மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் பல திருத்தங்களைக் கொண்டு வர முடிந்தது. ஜெயவர்த்தனாவின் அரசு கலைக்கப்படும்வரை இந்த யாப்பிற்குப் பதினெட்டுத் திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. இத்திருத்தங்களுள் 6வது திருத்தம் என அழைக்கப்படும் திருத்தம் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மிக முக்கியமானது.

### இனப்படுகொலைகள்

1983 ம் ஆண்டு ஜூலை மாதத்தில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு மட்டுமல்ல, நினைத்துப் பார்க்கவே முடியாதஅளவிற்குத்தமிழினப் படுகொலை நடத்தப்பட்டது. இவ்வினப் படுகொலையின் உச்சக்கட்டமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறையிருந்த 52 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளைத் தொடர்ந்து திரு. ஜெயவர்த்தனா அரசு அரசியல் யாப்பிற்குக் கொண்டுவந்த திருத்தமே 'ஆறாவது திருத்தம்' எனப்படுவது. இதற்கு முன்பும் ஐந்து திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அவை இங்கு ஆராயப்படவேண்டிய முக்கியத்துவமுடையன அல்ல.

அரசியல் அமைப்புத் திட்டத்திற்கான ஆறாவது திருத்தம், முன் சொல்லப்பட்டது போன்று 1983ல் நடைபெற்ற தமிழ் இனக் கொலை அழிப்பைத் தொடர்ந்து இருவாரங்களுக்குள் அதாவது 1983-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ம் திகதி சட்டமாக்கப் பட்டது. தமிழினக் கொலை, அழிப்பு ஆகியவற்றைக் கட்டுப் படுத்துவதற்குஅல்லது,ஒடுக்குவதற்கு இத்திருத்தம் கொண்டு வரப்பட்டதாகக் கூறமுடியாது. இதற்கு எதிர்மாறான நோக்கங்களை எய்தவும், தமிழர்களைத் துன்புறுத்தவும், ஒடுக்கவும் ஒழிக்கவும் வெறும் காடைத்தனத்தை மட்டும் நம்பியிராமல் சட்டரீதியாகவே தமிழர்களை ஒழிப்பதற்காக, அழிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ஆயுதமே இந்திருத்தச் சட்டம். இதன் மொத்த விளைவு தமிழினஒழிப்பைச்சட்டபூர்வமாக்குவதாகவே முடிந்திருக்கிறது.

### தடைகள்

இந்த ஆறாவது திருத்தச் சட்ட மூலம் 1978-ம் ஆண்டு தமிழ் மக்கள் மீது திணிக்கப் பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தின் 157-ம் பிரிவிற்கு அடுத்ததாக 157-A என்று எண்ணிடப்பட்ட ஒரு புதிய சட்டப் பிரிவும் இணிக்கப்பட்டது. இச்சட்டத்தின் முதலாவது துணைப்பிரிவின் படி இலங்கைத்தீவிற்கு உள்ளோ, வெளியிலோ வசிக்கும் எந்த நபரும் சிறீலங்காவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வேறு தனியான ஓர் அரசை நிறுவுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு நல்குவதோ, அந்நோக்கத்தை பரப்புவதோ, அதற்கான நிதி உதவி வழங்குவதோ, உற்சாகபடுத்துவதோ, அல்லது அந்த நோக்கத்தை வலியுறுத்துவதோ தடை செய்யப்பட்டது. அதே போல எந்த அரசியல் கட்சியோ, அமைப்போ இலங்கையின் எப்பகுதியிலும் வேறு ஒருஅரசை நிறுவுவதை தனது நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருப்பது தடைசெய்யப்பட்டது. அதாவது தமிழர்களுக்கான தனியரசுக் கோரிக்கை சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டது.

இக்கட்டத்தில் இலங்கைத் தீவின் சமீபகால அரசியல் வரலாற்றைச் சிறிது நினைவிற்கு வரவழைத்துக் கொள்வது முக்கியமானதாகும்.

### தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது தமிழ் பேசும் மக்கள் தமது '' சுயநிர்ணய உரிமையை '' உபயோகித்து ஒரு தமிழரசை நிறுவி, ஒரு கூட்டாட்சி அரசமைப்பை இலங்கையில் ஏற்படுத்த (சமஷ்டி அரசு) மக்கள் ஆணையைத்தேர்தல் விஞ்ஞாபனம் மூலம்இலங்கைத்தமிழரசுக்கட்சி கோரிநின்றது. தமிழரசுக்கட்சியின் இத்தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தமிழ் பேசும் மக்கள் பெருவாரியாக ஏற்றனர். 1956ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்ஈழத்தின் தென்கோடித் தொகுதியான பொத்துவில் தொகுதியிலிருந்து தமிழரசுக்கட்சி வேட்பாளரான ஜனாப், எம். எம். முஸ்தபா, கல்முனைத் தொகுதியிலிருந்து கேற்முதலியார், எம். எஸ். காரியப்பர் ஆகிய முஸ்லீம் தலைவர்கள் உட்பட, 10 தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் பாராளுமன்ற உறுப்பினராயினர். அதாவது தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தமிழ்ப் பேசும் மக்கள் ஏற்று, தமிழ் முஸ்லீம் மக்கள் தங்கள் சுய நிர்ணய உரிமை அடிப்படையில், ஒரு தமிழரசை நிறுவி ஒரு கூட்டாட்சி முறை அரசியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற தமது தீர்ப்பைத் தெட்டத் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். 1956ம் ஆண்டிற்குப்பின் 1965ல் ஒரு பொதுத் தேர்தலும், 1970ல் ஒரு பொதுத் தேர்தலுமாக நான்கு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இவை ஒவ்வொன்றிலும் தமிழரசுக்கட்சி தனது 1956 பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்பட்ட தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை உபயோக அடிப்படையில் ஒரு தமிழரசை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்களின் ஒப்புதலையும் பெற்றது. 1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தமிழ் மக்கள் ஒரு தனி ஈழத்தமிழரசை நிறுவுவதற்குத் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அதிகாரம் வழங்கினர். ஆக மொத்தத்தில் ஆறு பொதுத் தேர்தல்களில் தமிழ் ஈழ மக்கள், தமது தீர்ப்பைத் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். தமிழ் மக்களின் தீர்ப்பு எப்படி இருந்தபோதும், தங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை மேலும், மேலும் வலுவாக்கிக் கொண்டே வந்தது சிங்கள அரசு. ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் ஒவ்வொரு புதிய அரசு பதவி ஏற்று, பதவிக் காலம் முடிந்து அடுத்த பொதுத்தேர்தலைச்சந்திக்கும் போது தமிழர்களின் உரிமைகளில் ஏதோ ஒன்றையாவது அவை பறிக்கத்தவறவில்லை.

### ஆறாவது திருத்தச் சட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்பு

எந்த அரசு பதவிக்கு வந்தாலும், அந்த அரசின் பதவிக் கால முடிவில் தமிழ் ஈழமக்கள் ஏதோ ஒரு அரசியல் இழப்புக்குள் தாம் ஆளாகி விட்டதைக் கண்டார்கள். இத்தவகையில்ஜெயவர்த்தனா அரசினால் கொண்டுவரப்பட்ட 6வது அரசியல் அமைப்புச்சட்டத் திருத்தம் தமிழ் மக்களின் இழப்புக்களுக்கு முடிவைத்தது போல இருக்கிறது. எந்த உரிமைக்காக தமிழ் பேசும் மக்கள் ஆறு பொதுத் தேர்தல்களில்தமதுதெளிவான முடிவைவெளியிட்டார்களோ, அந்த உரிமையைச் சட்டபூர்வமாக மறுக்கவும், அதனையும் மீறி தமிழ் மக்கள் அவ்வுரிமையை வலியுறுத்தின், அவர்களை அடக்கவும் ஒடுக்கவும் ஈற்றில் அழிக்கவும் கொண்டு வரப்பட்டதே இந்த ஆறாவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம்.

### பதவிகளைப் பறிக்கும் சட்டம்

மேலே காட்டப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தம் தனிநபர்களும், அரசியல் கட்சிகள், அல்லது இதர அமைப்புக்களும் இலங்கைத்தீவில் வேறொரு தனி அரசை - அதாவது தமிழீழத்தில் தமிழீழத்தனியரசை - நிறுவுவதற்கான எந்த நடவடிக்கையையும், பேச்சாலோ எழுத்தாலோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எடுக்கத்தடை விதித்தது. இந்தப்புதிய சட்டத்தினைமீறுபவர்களுக்குப் பெரும் தண்டனை வழங்க இருத்தச் சட்டம் வழி வகுத்தது. தண்டனைகளுள் குடியியல் உரிமைகளை இழத்தல், அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை இழத்தல், பாராளுமன்ற உறுப்பினர், அரச ஊழியர் பதவிகள், நீதிபதிகள், சட்டத்தரணி பதவிகள் போன்ற சகலதையும் இழக்க வழி செய்தது.

### சத்தியப்பிரமாணம்

இவற்றோடு நில்லாது குறித்த 6வது திருத்தச்சட்டத்தில் அரசியல் அமைப்புத் திட்டத்திற்கான ஏழாவது அட்டவணையாக ஒரு அட்டவணையும் இணைக்கப்பட்டிருந்தது. இந்த அட்டவணை ஒரு சத்தியப் பிரமாணம் ஆகும். மேலே சொல்லப்பட்டுள்ள அனைத்துத்தரப்பினரும் இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படிசத்தியப்பிரமாணம்செய்ய வேண்டுமென ஆறாவது திருத்தச்சட்டம் கூறியது. இந்தச் சத்தியப் பிரமாணத்தின்படி மேற்சொல்லப்பட்ட அனைவரும் தாங்கள் சிறிலங்கா அரசியல் யாப்பைப்பேணுவோம் எனவும், இலங்கையிலிருந்து கொண்டோ, வெளியிலிருந்து கொண்டோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ, இலங்கையில் எப்பகுதியிலும் வேறான ஒரு தனி அரசை நிறுவ எவ்விதத்திலும் செயற்படமாட்டோமெனவும் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டியிருந்தது. இச்சத்தியப் பிரமாணத்தைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்தால், அது மக்கள் அவர்களுக்கு இட்ட கட்டளையை மீறுவதாகும். இதே நேரத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். ஆனாது, எந்தத்தமிழனும், அரசாங்க ஊழியர் உட்பட அந்தச் சத்தியப்பிரமாணத்தை எடுக்கக்கூடாதெனப் பிரச்சாரம் செய்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கையில் அரசாங்க ஊழியர், மற்றும் வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், தத்தம் தொழிற் சங்

(11-ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# தலைவர் பிரபாகரன் - ஹமீத் பேச்சு வார்த்தை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும் பிரதமஇராணுவத்தளபதியுமான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும், சிறீலங்கா அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரும், 1990 சித்திரை 18-ம் திகதியன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தினார்கள்.

சிறீலங்கா அரசின் பிரதிநிதியான நீதி மந்திரி ஜனாப் ஹமீத் அவர்கள், திரு. பிரபாகரனின் தலைமையிலான அணியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகக் கொழும்பில் இருந்து யாழ் நகருக்குப் பறந்து சென்றார். இச் சந்திப்பு மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் அணியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராஜா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி திரு. பானு, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச் சந்திப்பு, வட-கிழக்கின் தற்போதைய பாதுகாப்புச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்காக நடத்தப்பட்டது.

### திருகோணமலை-பருத்தித்துறை நிகழ்வுகள்

அண்மையில் திருகோணமலையிலும், பருத்தித்துறையிலும் ஒரே காலத்தில் நடைபெற்ற சிங்களக் காவல்துறை (பொலிசார்) தொடர்பான இரு முக்கிய நிகழ்வுகள் தமிழ் பேசும் மக்களிடையே அச்சத்தை உண்டுபண்ணியதோடல்லாமல், சிறீலங்கா இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் ஒரு பதட்டமான நிலையையும் ஏற்படுத்தி இருந்தது.



### திருகோணமலையில்

திருகோணமலை நகரத்தில் தமிழ் பேசும் பொது மக்கள் சிலருக்கும் காவல் துறையினருக்கும் ஏற்பட்ட ஒரு நிகழ்வு பற்றி விடுதலைப் புலிகள் தங்கள் பலத்த எதிர்ப்பை உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்ப் பெண்கள் சிலருடன் காவல் துறையினர் விட்ட சேட்டைகளை எதிர்த்துக் காவல்துறைக்கு முன்பாகத் திரண்டு வந்த பொது மக்கள் கூட்டத்தின் மீது காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியபோது இருவர் காயமுற்றனர். இதைத் தொடர்ந்து ..

விடுதலைப் புலிகள் காட்டிய கடும் எதிர்ப்பினால் உயர் காவல்துறை உத்தியோகஸ்தர்கள் விசாரணை நடத்தினர். இதன்பின், சம்மந்தப்பட்டவர்கள் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு அப்பகுதியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.

### பருத்தித்துறையில்

பருத்தித் துறையில் சிங்களக் காவல் துறையினர் (பொலிசார்) தங்களின் விடுதிகளை விட்டு வெளியே சென்று நகரத்தினுள் நுழைந்து தமிழ்ப் பெண்களுடன் சேட்டை விட்டு, பொது மக்களைத் தாக்கியபோது, ஒரு 'பூகம்பம்' வெடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிற்று.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் விரைந்து மேற்கொண்ட திடமான நடவடிக்கையின் விளைவாக, காவல் துறையினர் தமது விடுதிகளுக்குள் அனுப்பப்பட்டு, சுற்றி முற்றுகையிடப்பட்டனர். இணக்கமான, தீர்மானமொன்றை எடுப்பதற்காக விடுதலைப் புலிகள் எடுத்த முடிவைக் காவல் துறையினர் ஏற்க மறுத்த காரணத்தால் அனைத்துக் காவல் துறையினரும் பலாலி சிறீலங்கா இராணுவ முகாமை நோக்கிப் பாதுகாப்பாக அனுப்பப்பட்டனர். அதேசமயம் தமிழீழ விடுதலைப் போராளிகள், காவல்துறையினரின் இடங்களில் நிலை கொண்டனர்.

### வல்வெட்டித் துறையில்

தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை நிச்சயப்படுத்துமுகமாக விடுதலைப் புலிகள் வல்வெட்டித்துறைக் காவல் நிலையத்தைச் சுற்றி வளைத்து, காவல் துறையினரை அமைதியாகப் பலாலி இராணுவ முகாமுக்குள் பின்வாங்குமாறு கோரினார்கள். அவர்களும் அப்படியே செய்தார்கள்.

கடந்த காலங்களில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் துன்புறுத்தல்களையும், சிங்களக் காவல் துறையினருக்குள் இருந்த இனவாதிகளால் உருவாக்கப்பட்ட ஆபத்துக்களையும் நன்கு அறிந்திருந்த தமிழ் பேசும் மக்கள், விடுதலைப் புலிகளின் செயலை வரவேற்றனர்.

திரு. பிரபாகரனுக்கும், அமைச்சர் ஹமீதுக்கும் இடையில் நிகழ்ந்த சந்திப்பில் முக்கியமாக, வட-கிழக்கில் நிலவிய பதட்டமான இந்நிலை பற்றியே பேசப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் குழு தமிழ் - முஸ்லீம் பகுதிகளில் சிங்களக் காவல் துறையின் தலையீடு, அப்பகுதி மக்களின் அமைதிக்கும் - சமூக நிலைக்கும் தீங்கு விளைவிக்கும் என்பதை ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியது.

பாதுகாப்புத் தேவைகளுக்கு மேலதிகமான அளவில் உள்ளதென திரு. பிரபாகரன் சுட்டிக் காட்டினார்.

பொது மக்களின் சுதந்திரமான அன்றாட நடமாட்டத்துக்கு இடையூறாக இவ்வாறு விடுதலைப் புலிகள் தேர்ந்தெடுக்கும் இடங்களில் நிலை கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறிய அளவிலான காவல் துறையினர், வல்வெட்டித் துறையிலும், பருத்தித் துறையிலும் அனுமதிக்கப்படலாம் என்பதை, திரு. பிரபாகரன் ஏற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் - முஸ்லீம் மக்களின் தொடர்பைப் பலப்படுத்தல் பற்றியும், இங்கே ஆராயப்பட்டது.

வடக்கிலும் கிழக்கிலும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட அதிக அளவிலான அழிவை அமைச்சர் ஹமீத்திடம் விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டி வட, கீழ் மாகாணங்களுக்கான புனர் நிர்மாண வேலைகளைத் தொடக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தினர்.


வீதிகளும் பாவனைக்கு ஏற்றதாக அல்லாமல் போய் விட்டன-மருத்துவ நிலையங்கள் தகர்க்கப்பட்டு ஊழியர்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவைகளுக்கு வழங்க வேண்டிய உடனடி நிவாரண வேலைகள் பற்றியும், விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறினர்.

## சிறீலங்கா காவல்துறையினரின் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடு

### கட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் சேவையை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட இணக்கம்

வல்வெட்டித் துறையிலும் பருத்தித்துறையிலும் அதிக எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டுள்ள காவல்துறையினரின் அளவு அப்பகுதிக்கான

அமைச்சர் ஹமீத் அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கமாகத் தீர்ப்பதற்கான புதிய அடிப்படை அணுகு முறையை எடுத்துக் கூறி, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கோரினார்.



சிறீலங்காவின் நீதி அமைச்சர், ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்

## ஒரு தாயின் போராட்டம்

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டி குளம் எனும் இடத்தில் திருமதி சந்தாப் பிள்ளை திரேசம்மா எனும் தாய் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தியுள்ளார்.

1984ம் ஆண்டு சிறீலங்காப் படையால் கைது செய்யப்பட்டு, காணாமல் போன மகனையும் மருமகனையும் பற்றி அண்மையில், சிறீலங்காப் படைமுகாமுக்குச் சென்று விசாரித்தபோது அவர்கள் இருவரும் உயிருடன் இல்லை என அத்தாய்க்குக் கூறப்பட்டது.

இதை எதிர்த்தும், சிறையிலுள்ள மற்றைய கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியும் இவர் 28-04-90 அன்று தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இவரது மகனைப்போலவும், மருமகனைப் போலவும் கடந்த காலங்களில் சிறீலங்காப் படையாலும், இந்தியப் படையாலும் கைது செய்யப்பட்டு சிறைக் கூடங்களில் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஏராளம்.

இன்றும் இப்படியான கொலைகள் தென் இலங்கையிலும், மலையகத்திலும் தொடர்கின்றன.

www.eelamview.com

# துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் இனங்காண்போம்

*அன்பான தமிழீழ மக்களே !*

எமது போராட்ட வரலாற்றில் நாம் பெரிய இழப்புக்களைச் சந்தித்திருக்கிறோம். பெரிய இழப்புக்களுக்கு மத்தியிலும் எமது இலட்சியத்திற்கான போராட்டம் உறுதியாகத் தொடர்ந்தது. எமது போராட்டத்தில் எத்தகைய சவாலையும் சந்திக்கும் மனோதிடத்தைப் பெற்றுள்ளோம். எமது நாட்டை ஆக்கிரமித்த இந்தியப்படையை எமது மக்களினதும், போராளிகளினதும் தியாகத்தாலும், மக்களின் ஆதரவாலும் வெளியேற்ற முடிந்தது. இந்த மாபெரும் வெற்றியானது, உலக அரங்கில் எமக்குக் கௌரவத்தைப் பெற்றுத் தந்துள்ளது, இனிவருங்காலங்களிலும் இப்போதுபோல் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்திருந்தால் எமதுமண்ணை யாராலும் ஆக்கிரமிக்க முடியாது.

போராட்டக்காலத்தில் தமிழீழத்தில் வாழ்ந்த மக்களை நான்கு பிரிவுக்குள் அடக்கலாம்.

(1) தேச பக்தர்கள்

(2) விடுதலை விரும்பிகள்

(3) சந்தர்ப்பவாதிகள்

(4) தேசத் துரோகிகள்

## தேச பக்தர்கள்

இவர்கள் இன்று நாம் கண்டுள்ள வளர்ச்சிக்கு எல்லாவிதத்திலும் உதவியவர்கள். போராட்டத்தில் எமக்கு உதவுவதற்காக உயிர்களை இழந்தார்கள்; சொத்துக்களை இழந்தனர்; உடல் ஊனமுற்றனர்; விதவைகள் ஆகினர்; சிறை சென்றனர்; அகதிகள் ஆகினர். இவற்றுக்குப்பின்பும் எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் போராட்டத்தில் நிற்கும் தேசபக்தர்கள் இவர்கள்.

## விடுதலை விரும்பிகள்

இவர்கள் எதிரிக்குப் பயந்து, உயிர்ழப்புக்குப் பயந்து, நேரடியாக எமக்கு உதவ முன்வராத போதும், எதிரிக்குத் துணைபோகாமல், எதிரியின் நடவடிக்கைகளை உளரீதியாக எதிர்ப்பவர்கள்.

## சந்தர்ப்பவாதிகள்

எதிரிகளிடமிருந்தும், எம்மிடமிருந்தும் தங்கள் நலன்களைப் பெறுவதிலும், பேணிக்காப்பதிலும் கண்ணாக இருப்பார்கள்.

## தேசத் துரோகிகள்

தமிழ் பேசும் மக்களில் மிகக் குறைந்த அளவினரே இவர்கள். எதிரிக்கு முழுமையாகத் துணைபோய், போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள். பல தேசபக்தர்களின்-போராளிகளின் கொலைகளுக்கு இவர்கள் காரணமாக இருந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக எதிரியோடு சேர்ந்து எம்மக்கள் மீது போர்தொடுத்தார்கள்.

இன்று எமது இயக்கத்தின் அரசியல் பிரிவை 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்னும் பெயரில் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்துள்ளோம்.

பரந்துபட்ட மக்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கி எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பது எமது கட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

அந்த மக்கள் அமைப்பை நாம் உருவாக்கும்போது அந்த அமைப்புக்குள் பல துரோகிகளும், சந்தர்ப்பவாதிகளும் இடம் பெற்றுவிடுகின்றனர். இதைக்கண்டு போராட்டத்தோடு முழுமையாக நின்ற மக்கள் மனக்கசப்பும், வெறுப்பும் அடைகிறார்கள்.

நாம் தலைமறைவு வாழ்க்கையில் இருந்து அண்மையில்தான் வெளிப்படையாக இயங்க ஆரம்பித்துள்ளோம். எம்மால் முழுமையாகத் துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் இனம் காண முடியாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால், எமது மக்கள் பூரணமாக ஒத்துழைத்தால் இவர்களை நாம் இனங் கண்டு கொள்ளலாம்.

எமது தலைமறைவு வாழ்க்கையின்போதும், நெருக்கடிகளின்போதும், பல மக்களுடனான தொடர்புகள், உதவிகள் இரகசியமாகவே இருந்தன. அவையும் போராளிகள் சிலருக்கே தெரிந்திருந்தது. அவர்களில் பலர் இன்று வீரமரணம் அடைந்து விட்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கிய பலர், இயக்க வேலைகளுக்காக இன்று வேறு இடங்களுக்குச் சென்று விட்டார்கள்.

நீண்டகால அனுபவங்கள், தொடர்புகள் உள்ள போராளிகள் வீரமரணமடைகின்றபோது, நீண்ட அனுபவங்களோடு பழைய தொடர்புகளும் துண்டித்துப் போகின்றன. இது தலைமறைவு, கரந்தடி இயக்கத்தில் தவிர்க்க முடியாத ஒன்று.

இதே நிலைதான் துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் இனங்காணுவதிலும் ஏற்படுகின்றது.

தமிழீழ - இந்தியப் போரில் குறுகிய காலத்துக்குள் நாம் பல அனுபவம்மிக்க மூத்தபோராளிகளை இழந்துவிட்டோம்.

போராட்டத்திற்கு முழுமையாக உதவி செய்துநின்ற தேசபக்தர்களுக்கும், மறைமுகமாக நின்ற விடுதலை விரும்பிகளுக்கும் இந்தத் துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் முழுமையாகத் தெரியும். அவர்களின் துரோகத் தனத்தால் ஏற்பட்ட முழு விளைவுகளையும் நீங்கள் நேரடியாகச் சந்தித்தவர்கள். இவர்களை எமக்கு இனம் காட்ட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு.

பல நிர்ப்பந்தம் காரணமாக எமக்கு உதவ முடியாமல் போனவர்களை எதிரியாகப் பார்க்காமல், ஒரு சில சமயங்களில் எதிரியுடன் காணப்பட்டவர்கள் என்பதற்காக 'துரோகி' என்று முடிவும் எடுக்காமல், துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் சரியாகஇனம் காணுதல் முக்கியமானது. இதை உங்களால் செய்ய முடியும். ஏனெனில், நீங்கள் அவர்களோடு நீண்ட காலமாக வாழ்ந்து வருபவர்கள்.

இவர்கள் இனம் காணப்பட்டு அகற்றப்பட வேண்டியவர்கள். இல்லையேல் நாம் அரும்பாடுபட்டு, பல தியாகங்களுக்கு மத்தியில் கண்டுள்ள வளர்ச்சி, இவர்களால் அழிக்கப்படும்; இன்னுமொரு ஆக்கிரமிப்பாளனிடம் எமது மண் அடகு வைக்கப்படும்.

எமது தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைப் பரந்துபட்ட அளவில் முன்னெடுக்கும்போது, அதற்கு எதிரானவர்களை, நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இனம் காண்போம். இதற்கான முழுமையான ஒத்துழைப்பை நீங்கள் தருவீர்களென எதிர்பார்க்கின்றோம்.

www.eelamview.com




# SATANIC FORCES

தமிழீழத்தில் இந்தியப் படையின் தலையீடு, இந்தியா விட்ட ஒரு மாபெரும் தவறு என்பதை உலகம் இன்று ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள்மீது இந்தியா நடாத்திய போரால், பெருமளவில் உயிர் இழப்புகள் ஏற்பட்டன. பெரும் செலவுடன், மிக நீண்டகாலம் இந்தியாவால் நடாத்தப்பட்ட இப்போரில், இந்தியப்படைக்கு ஏற்பட்ட தோல்வி இந்தியாவுக்கும் இந்தியப் படைக்கும், பெரிய அவமானத்தைக் கொடுத்துள்ளது.

இந்திய ஆக்கிரமிப்பு எவருக்கும் எது ுத பயனையோ, நன்மையையோ தரவில்லை; மாறாக, எதிர்விளைவுகளையே கொடுத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் மேற்கொள்ளப்பட்ட சாதுர்யமான அரசியல் இராஜ தந்திரச் சாணக்கியத்தாலும், விடுதலைப் புலிகளின் உக்கிரமான போர்த் தாக்குதல்களாலும், இந்தியப் படையினரின் திட்டங்கள்யாவும் தவிடு பொடியாகின.

இந்திய - புலிகள் போரில் அதன் முரண்பட்ட தன்மையை, அப்போரின் இறுதி விளைவிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

1. அமைதிப்படை என்று சொல்லிக்கொண்டு வந்தவர்கள் - மிகவும் கொடூரமான, மனிதத் தன்மையற்ற ஒரு போரை நடாத்தினார்கள்.
2. ஆயுதக் களைவு என்று சொல்லிக்கொண்டு வந்தவர்கள்-பயங்கரமான ஆயுதங்களைக்கொடுத்து, 'தமிழ்த் தேசிய இராணுவம்' என்ற கைக்கூலிகள் பட்டாளத்தை உருவாக்கினார்கள்.
3. தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்கு என்று நுழைந்தவர்கள, தமிழ், முஸ்லீம் மக்களைப் படுகொலை செய்தார்கள்.
4. விடுதலைப் புலிகளை அழித்து, ஒழிக்க இந்தியா தீட்டிய திட்டங்கள்-அவர்கள் இன்று, அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் மிகவும் சக்தி வாய்ந்த இயக்கமாக வளரவே வழிவகுத்தது.

## இந்திய அரசின் தவறான கணிப்பீடும் விளைவுகளும்

72 மணி நேரத்தில் வெற்றியடையும் இராணுவ நடவடிக்கை என்று கூறி, இந்தியாவால்புலிகள்மீது 10-10-87 அன்று தொடக்கப்பட்ட போரானது, 720 நாட்களுக்கு மேலாக நீடித்தது மட்டுமல்லாமல், இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மிக நீண்டகாலப் போராகவும் மாறியது. இந்தப் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்களேயாவர். தமிழ்-முஸ்லீம் மக்கள் இப்போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இந்தியப்படை மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே வெற்றியடைய விரும்பியது. ஆனால், போர் நீண்டது. தமக்கேற்பட்ட பலத்த சேதத்தினால் ஆத்திரமடைந்து, மனவிரக்தியடைந்து, ஒழுங்கீனமாக நடந்த இந்தியப் படையினர், போர்முறைகளின் தர்மங்கள், நடைமுறைகள் சகலவற்றையும் மீறி இரக்கமில்லாது நடந்தார்கள்.

## பொதுமக்கள் மீது தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கடுமையான, உக்கிரமானஎதிர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாத இந்தியப் படையினர், பாதுகாப்பற்ற அப்பாவிப் பொதுமக்களின் இருப்பிடங்களை நோக்கித் தொலைதூர ஏவுகுண்டு (ஆட்லறி), (மோட்டார் செல்) களால் தாக்கினார்கள். இந்த இரக்கமற்ற தாக்குதல் குடிமக்களுக்குப் பெரிதும் சேதத்தை உண்டாக்கியது.

ஆரம்பத்தில் இரண்டுவாரங்களுக்கு மேலாக நடந்த யாழ்ப்பாணப் போரினால், இரண்டாயிரத்துக்குமதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 5000க்கு மேற்பட்ட மக்கள் காயமடைந்தார்கள்; ஐந்து இலட்சத்துக்கு (5,00,000) மேற்பட்ட மக்கள் அகதிகளானார்கள். போரில் முன்னேறிச்சென்ற இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் படுகொலைகளும், பயங்கரத் தாக்குதல்களும், ஆதரவற்ற அகதிகள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும், மனிதத் தன்மையற்ற, காட்டுமிராண்டித் தனமான செயலாகவே இருந்தன. விடுதலைப் புலிகள் மீது தொடக்கப்பட்ட இப் போரானது, இறுதியில் பொதுமக்கள்மீது நிகழ்த்தப்படும் ஒரு தாக்குதலாகவே மாறியது.

இந்தியப் படைகள் கொல்லப்படும்போது, பதிலுக்குச் சாதாரண பொதுமக்கள் கொல்லப்படுவது, சாதாரண சம்பவமாக மாறியிருந்தது. இதில் மிகப் பயங்கரமானது யாழ் அரசினர் வைத்திய சாலைமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இந்தியப் படையினர் ஈவிரச்கமில்லாமல், மனிதாபிமானமற்று வைத்தியர்கள், தாதிகள், வெளிநோயாளர்கள், தங்கியிருந்த நோயாளிகள் உட்பட 60க்குமதிகமானோரைக் கொன்றனர். யாழ்ப்பாணம் ''பிரம்படி ஒழுங்கைத் தாக்குதல், சாவகச்சேரி நவீனசந்தை மீதான 'போர் உலங்குவானூர்தி'களின் ஏவுகணைத் தாக்குதல், இறுதியாக வல்வையில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் என்பன சர்வதேச ரீதியில் இந்தியாவுக்குக் கண்டனத்தைக் கொடுத்தன.

விடுதலைப் புலிகளின் அதிகரித்த உக்கிரத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இந்தியப் படையினர் பொதுமக்களைப் பழிவாங்கினார்கள். அப்பாவிப் பொதுமக்கள் மீது இவர்கள் பிரயோகித்த ஈவிரக்கமற்ற அடக்குமுறைகளால், இந்த இரண்டு வருட காலத்தில் 6000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் அழிக்கப்பட்டார்கள்.

இந்தியப் படையைக் கண்ட மக்கள் பயந்தார்கள்; அதை வெறுத்தார்கள். அதனை, தமது தாயகத்தை ஆக்கிரமித்துள்ள ஒரு படையாகவே கருதினார்கள். இப்படை இங்கு இருப்பதால் தமிழ்-முஸ்லீம் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும் என்ற எண்ணம் அறவே இல்லாமற் போயிற்று. அதனால் தமிழ்-முஸ்லீம் மக்கள் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான புலிகளின் தாக்குதல்களைப் பெருமளவில் ஆதரித்தார்கள்.

இந்தியப் படை பொது மக்கள்மீது மேற்கொண்ட ஒழுக்கமற்ற நடவடிக்கைகளும், வெறுக்கத்தக்க செயற்பாடுகளும், ஈவிரக்கமற்ற கொடூரமான தண்டனை முறைகளும், மனித உயிருக்கும், மனித வாழ்க்கைக்கும் அளிக்கப்பட்ட அவமரியாதையும், மக்கள் இந்தியப் படையை அடியோடு வெறுக்கக் காரணமாய்அமைந்தன. இந்தியப் படையின் தலையீடு தோல்வியடையக் காரணமாக அமைந்தது.

தற்போது, இந்தியப் படை முற்று முழுதாக வெளியேறிய போதும், தமிழர் தாயகத்தில் அமைதியும், சமாதானமும் சகஜ நிலைக்கு வந்த போதும், இந்திய அமைதிப்படையால் தமிழ்த் தேசிய இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அழிக்க முடியாத வடுக்கள் ஒரு போதும் மாறாது.

## 'றோ'வின் தவறான கணிப்பு

விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை பற்றியும், அவர்களின் போராட்ட வல்லமை, இலட்சியத்தில் அவர்களுக்கு இருந்த திடசங்கற்பம் பற்றியும், தவறாகக் கருதி, தவறாகக் கணித்து எடை போட்டதும் அவர்களின் தோல்விக்கு இன்னொரு காரணமாகும். விடுதலைப் புலிகளின் பலத்தையும், நோக்கத்தையும் தவறாகக் கணித்து எடைபோட்ட ''றோ'' அமைப்பு, ''விடுதலைப் புலிகளை ஒருசில தினங்களுக்குள் அழித்து விடலாம்'' என்று கொடுத்த அறிக்கையை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நம்பினார்கள். போர் நீண்டு கொண்டிருந்தபோது, இந்தியப் படை இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்த போது, இந்தியா தனது தவறை உணர்ந்தது.

இந்தியர்கள் எண்ணியது போல, சாரமணிந்த விளையாட்டுப் பையன்களைக் கொண்ட அமைப்பல்ல, விடுதலைப்புலிகள். இந்தியப் படை முன்எப்போதும் கண்டிராத, உலகிலேயே தலைசிறந்த ஒரு கெரில்லாப்போராட்ட இயக்கத்தை, திடமான இலட்சியப் பற்றும், மிகவும் கட்டுப்பாடும், ஒழுக்கமும், நல்ல அமைப்புமுடைய ஓர் இயக்கத்தை எதிர்நோக்க வேண்டி இருந்தது. யுத்த முறையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது. இந்தியப்படையின் கௌரவம் கேலிக்கிடமானது.

இருந்தும், விடுதலைப் புலிகளின் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தக் கோரிக்கையை, ராஜீவ் காந்தி நிராகரித்ததுடன், கூடியவிரைவில் போரில் வெற்றியடைய விரும்பினார். தமிழர் தாயகத்தில் தமது பலத்தைக் காட்டியதுடன், புலிகளுக்கெதிரான தாக்குதல்களில் ஒரு லட்சத்துக்குமதிகமான படையினர், பலவகைப்பட்ட சங்கேதப் பெயர்களில்

www.eelamview.com

(CODE NAME) தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். காடுகளில் சிறந்தபயிற்சிபெற்ற அதிரடிப் படையினர், காட்டுப் பகுதிகளில் புலிகளுக் கெதிரான தாக்குதல்களில் ஈடுபடுத்தப் பட்டனர். புலிகளால் தொடுக்கப் பட்ட பலத்த எதிர்த்தாக்குதல்கள் இந்தியப் படைக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் இந்தியப் படைகளின் மனோநிலை பாதிக்கப் பட்டது. பலவகையான தீவிர தாக்குதல்களை மேற்கொண்டு, கடுமையான பிராயச்சித்தத்தின் முடிவில், இந்தியா, புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்தது. விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகையும், உயிர்ச்சேதமும் கற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கூடியது.

இந் நிலையிலேயே 1989-ம் ஆண்டு வைகாசி மாதம் 1-ம் திகதி, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் அழைப்பை ஏற்று, இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட, விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் கொழும்பு சென்றது. முரண்பட்டுக் கொண்ட இரு பகுதியினராலும் மேற்கொள்ளப்பட்ட கொழும்புப் பேச்சு வார்த்தை, இந்திய அரசாங்கத்தை (அப்போது ஆட்சியில் இருந்த) பெரிதும் பாதித்தது. வரலாற்று எதிரிகளான விடுதலைப் புலிகளும் - சிறீலங்கா அரசும் சுமுகமான நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டது. இலங்கை அரசு சார்பாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியப் படையால் மேற்கொள்ளப்பட்ட போரை அர்த்தமற்றதாகவும், நகைப்புக்கிடமானதாகவும் ஆக்கியது. விடுதலைப் புலிகளின் சாதுர்யமான இராஜதந்திர நடவடிக்கையால் ஒதுக்கப்பட்டு, அவமானப்பட்டு, திக்குமுக்காடிப்போன ராஜீவ் அரசின் நிர்வாகம், இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியதுடன், விடுதலைப் புலிகளுக்கெதிரான தனது தாக்குதல்களையும் உக்கிரப் படுத்தியது. இந்த நடவடிக்கையானது இந்தியப்படையின் தலையீட்டை உலகநாடுகளின் பார்வையில் கேலிக்குள்ளாக்கியது.

கொழும்புப் பேச்சு வார்த்தையின்போது விடுதலைப் புலிகள் குழுவினர் இந்தியப் படையின் அட்டூழியங்களைக் கண்டித்ததுடன், இந்தியப் படையை ஆக்கிரமிப்புப்படை எனவும் நிரூபித்தனர். ஐ. நா. சாசனங்களில் அமைதிப்படைகள் தொடர்பாக உள்ள மாதிரிகளைக்காட்டி, இந்தியப் படையை அமைதிப் படையாகக் கருதமுடியாது, அது ஓர் ஆக்கிரமிப்புப் படை என வாதிட்டனர்.

## அமைதிப்படையும் அதன் கடமைகளும்

அமைதிகாக்கும் படைகளின் மாதிரிகள் குறித்து ஐ.நா. சபை உருவாக்கியிருந்த மரபுகளை உதாரணம்காட்டி, விடுதலைப் புலிகளின் குழு பின்வருமாறு வாதிட்டது.

**SATANIC FORCES (சாத்தானின் படைகள்) என்ற ஆங்கில நூலின் முன்னுரையிலிருந்து எடுக்கப் பட்ட சில பகுதிகளின் தமிழாக்கம் இது.**

முரண்பாடுகளைக் கட்டுப் படுத்துவதற்கும், மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், சமாதானத்தை ஊக்குவிப்பதற்கும், சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவு கோல்கள் உள்ளன.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்க்கிடையில் பக்கஞ்சாராது, ஓர் அமைதிப் படை நிற்க வேண்டும். மோதல்கள் ஏற்படும் பகுதிகளில் அமைதியை மீண்டும் நிலை நாட்டுதல், அல்லது அதனைப் பேணுவதற்கு உதவுவதே அமைதிப் படையின் பிரதான பணியாகும்.

அமைதி காக்கும் பணி என்பது மோதலைக் கட்டுப்படுத்தலாகும். ஐ.நா. சபை மரபில் ஓர் அமைதிகாக்கும் படைக்கு வழங்கப்படும் ஆணை என்னவென்றால், மோதல்நிறைந்த நிலைமையை மோசமடையாது தடுத்தல் என்பதும், சமாதானமும், சகஜநிலையும் ஏற்படுவதற்கு வே டிய சூழ்நிலையை உருவாக்குதலுமே.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இவை அடிப்படையான முதற்தேவைகளாகும். அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் இராணுவத்திற்கு திர்ப்பந்திக்கும் அதிகாரம் கிடையாது. பலாத்காரத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. அவர்கள் எளிமையான தற்காப்பு ஆயுதங்களையே எப்பொழுதும் தம்முடன் கொண்டு செல்வார்கள். மோதல்களைப் பொறுத்தவரை முக்கிய கொள்கையான நடுநிலைமை வகித்தல், சம்பந்தப்படாதிருத்தல் என்பனவற்றை ஒவ்வொரு அமைதிப் படையும் கடைப் பிடிக்க வேண்டுமென எதிர் பார்க்கப் படுகின்றது.

போரில் ஈடுபட்டிருக்கும் சக்திகளின் சம நிலையில் எவ்வித மாற்றத்தினையும் ஏற்படுத்தக்கூடியவகையில் அமைதிப் படை நடந்துவிடக்கூடாது.

அத்துடன் உள்நாட்டு விவகாரங்களில் அது தலையிடக் கூடாது. நிலைமைகள் மேலும் மோசமடையாது தடுப்பதே அமைதிகாக்கும் பணியின் நோக்கமாகும். மோதலில் ஈடுபட்டிருப் போருக்கிடையே உள்ள உறவுகளை நிலை பெறச்செய்வதே இப்பணியின் இலக்காகும்.

## இந்தியப்படை அமைதிப்படை அல்ல

அமைதிகாக்கும் மரபுகளின் விதிப்படியும், விளக்கப் படியும் இந்தியப் படையை எந்த விதத்திலும், அமைதிப் படையாகக் கருத முடியாது. இந்தியப் படை ஒருபோதும் சமாதானத்தைப் பேணவில்லை; அத்துடன் முரண்பாட்டைக் கட்டுப்படுத்தவில்லை. பதிலாக, இந்தியப் படை கொடூரமான போரை நடாத்தி, சமாதானத்தைக் குழப்பி, முரண்பாட்டை மேலும் கூட்டியது.

விவிலிய வேதத்தில் சாத்தானின் கொடுமையினால் 'மனிதப்பேரழிவு' ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதுபோல இந்தியப் படையினரால் தமிழீழத்தில் செய்யப்பட்ட அழிவுகளும் 'இந்தியப் படை' எனும் 'சாத்தானின் படைகளால்' செய்யப்பட்டகொடுமையாகவே கருதப்படுகின்றன. இந்தியப்படை சாத்தானின் படை போலவும், அழிவை மேற்கொள்ளும் பிசாசுகள் போலவும் இயங்கி, மனித வாழ்க்கையின் மதிப்பை அவமதித்து, மேற்கொண்ட ஈவிரக்கமற்ற கொடுமைகளால் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

அத்துடன் தமிழர் தாயகத்தில் பலவந்தமாக நிலை நின்றதுடன், அதிகாரத்தைப் பிரயோகித்து, இராணுவ ஆட்சியை உருவாக்கி இருந்தது.

இந்தியப் படை ஒருபோதும் நடுநிலைமையையோ, தலையிடாமையையோ கடைப் பிடிக்கவில்லை. பதிலாக, புலிகளுக்கெதிராகச் செயற்பட்டதுடன், இந்தியச்சார்புக் குழுக்களுக்கு ஆதரவும், ஆயுதமும் வழங்கி, பயிற்சியும் அளித்தது. அமைதி காப்பதற்குப் பதிலாக இந்தியப் படையானது விடுதலைப்புலிகளுடன் மோதியது. இந்தியப் படையானது அமைதிப் படைக்குரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்முறைகளையும், விதிகளையும் முற்றுமுழுதாக மீறிச் செயல் பட்டது. விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவெனில், தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருந்த இந்தியப் படைகளுக்கு, அமைதிப் படைக்குரிய தகுதிகள் எதுவும் இல்லை எனவும், அது ஓர் ஆக்கிரமிப்புப் படையே எனவும் கருதுவதாகும்.

## போர் நிறுத்தம்

போர்முனையில் புலிகளது உறுதிமிக்க, உக்கிரமான தாக்குதல்களும், கொழும்புப் பேச்சு வார்த்தையின் போது கையாண்ட இராஜதந்திர நடவடிக்கைகளும், இறுதியாக இந்தியப்படைக்கும், தமிழ்ப் புலிகளுக்கும் இடையே ஒரு போர்நிறுத்தத்தை தோற்றுவித்ததுடன், எமது தாயகத்திலிருந்து இந்தியப்படை வெளியேறுவதற்கும் வழி செய்வதாயிற்று.

இந்தியப்படையால், அமைதியின் போர்வையில் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப் பட்ட போர்க் கொடுமைகள் உலகத்தின் கண்முன் தெரியப் படுத்த வேண்டியது எமது கடமையும், பொறுப்புமாகும். இக் கடமைப்பாட்டில் ''சாத்தானின் படைகள்'' என்ற இந்த நூல் மிகமுக்கிய பங்களிக்கின்றது

## சாத்தான் ஒரு தீயசக்தி

இந்திய ஆக்கிரமிப்புப்படை இங்கு புரிந்த மிகக் கொடிய செயல்களை விவிலிய நூல் குறிப்பிடும் சாத்தானுடன் தொடர்புபடுத்துவது வெகு பொருத்தமே. மனிதர்களை அழிக்கும் ஒரு தீயசக்தியையே சாத்தான் என்னும் கருத்துருவம் குறித்து நிற்கிறது. இந்தியப்படை சாத்தானின் படை போன்று நடந்து கொண்டது. மனித உயிர்களை அறவே பொருட் படுத்தாது ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிரை பிசாசுகளைப்போல பறித்து அழிவை ஏற்படுத்தியது. ஒரு சிறு தேசியஇனம் அனுபவித்த மாபெரும் துயரத்தை ஆதாரங்களோடு இந்தத் தொகுப்பு ஆவண வடிவத்தில் தரும் ஒரு துணிகர முயற்சி எனலாம். இத்தனைக்கும் இச்சிறிய தேசிய இனம் இழைத்த ஒரேயொரு குற்றம், சிங்கள ஆயுதப்படைகள் மேற்கொண்ட இன அழிப்பு முயற்சிகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அமைதியைத் தேடியும் இந்தியாவின் உதவியை நாடியதுமேயாகும்.

அமைதி காக்கும் பணி என்ற 'சாக்குப் போக்கில்' எமது தாயகம் மீது படையெடுத்த இந்தியத் துருப்புக்கள் விட்டுச் சென்ற மரணமும், அழிவும் நிறைந்த துயர்தோய்ந்த கதை, சிங்களப்படையினர் புரிந்த அட்டூழியங்களையும் விட, மிக மிருகத்தனமானது. இந்தியப் படையினருடன் டில்லிஅரசாங்கமும் உடந்தையாக இருந்து ஒத்துழைத்ததன் பயனாக தாம் புரிந்த அட்டூழியங்கள் பற்றிய தகவல்கள் உலகிற்கு எட்டுவதைத் தடுப்பதில், மோசடிமிக்க முறைகளைக் கையாண்டனர். சர்வதேச மனித உரிமைகள், சங்கங்கள், தமிழீழத்திற்கு விஜயம் செய்து நேரடி விசாரணைகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்க, இந்திய அரசாங்கம் அறவே மறுத்தது.

## தொடர்பு சாதனங்கள் தடை

இந்திய ஆக்கிரமிப்புப்படை உள்ளூர் தொடர்புச் சாதனங்களுக்குத் தடை விதித்து, தமிழ்ப் பத்திரிகையாளர்களைச் சிறையிலிட்டு, ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நிலப்பரப்பிற்குள் உலகத் தொடர்புசாதனங்களைச் சேர்ந்தவர்கள் வருவதையும் தடுத்தது.

அத்துடன் இந்தியப் படையும் தமிழ் எட்டப்பர் கூட்டமும், குறிப்பாக ஈ. பி. ஆர். எல். எவ்.வும், ஈ. என். டி. எல். எவ்வும் பல தமிழ்ப் பிரமுகர்களையும், மனித உரிமைகளுக்காக உழைத்தவர்களையும், இந்தியப் படையின் காட்டுமிராண்டித்தனங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த பிரஜைகள் குழுத் தலைவர்களையும் திட்டமிட்டுக் கொன்றனர்.


டில்லி அரசாங்கமும், கொழும்பிலுள்ள அதன் தூதரகமும், பலாலியிலிருந்த இந்தியப்படை அதிகாரிகளும் ஆக்கிரமிப்புப் படை புரிந்த யுத்தக் குற்றங்களை மூடி மறைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், குற்றவாளிகளை இனங்காணுவதற்கு நாம் எடுத்த அயராத முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணைக் குழுவும் சர்வதேச தொடர்புச் சாதனங்களும், இந்திய அமைதிப் பணியை கிண்டலுக்கும், கேலிக்கும் உள்ளாக்கி, ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் நிலப் பரப்பில் இந்தியா இழைத்த பாரிய மனித உரிமை மீறல்களைக் கண்டித்துள்ளன.

எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஏற்பட்ட இருள்மிக்க ஒரு காலப் பகுதியினை இந்தப் பெரிய ஆவணத்தின் வாயிலாகப் பதிவு செய்வதற்கு உழைத்த தோழர்களின் அயராத, நுட்பமான பணியினை நாம் பாராட்டுகின்றோம்.




www.eelamview.com

# ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்



'கப்டன் திருச்செல்வம்'
(அந்தோனி குரூஸ் அல்போன்ஸ்)

கடல் அலைகள் தாலாட்டுப் பாடும் முல்லை நகர், அன்று மக்கள் பெருந்திரளாக நிறைந்து நின்றார்கள். அந்த மண்ணில் பிறந்த மகனொருவனின் துயர் கேட்க அவ்வூரின் மக்கள் கூடி நின்றனர்.

அன்னிய ஆக்கிரமிப்புக் கரத்தினை வெளிச்சம் போட்டுக் காட்ட அங்கு ஒரு தீபம் சுடர்விடத் தொடங்கி இருந்தது. போர் முனையில் வல்லவனொருவன் தன்னுடைய ''சாவு''ப் பயணத்தைத் தொடங்கி இருந்தான்.

அங்கு அமைதிப் போர்வையில் நுழைந்துவிட்ட காந்திதேசத்தவர்களுக்கு எதிராக-எங்களது மறுக்கப்பட்ட உரிமைகளை வேண்டி - ஒரு அகிம்சைப் போர் தொடுக்கப் பட்டிருந்தது. 'நீரையும், உணவையும் மறுத்து ஓர் அக்கினிப் போராட்டம்.'

திலீபனைத் தொடர்ந்து முல்லைத்தீவில் திருச்செல்வம் போராட்டத்தைத் தொடங்கி இருந்தான் - மட்டக்களப்பிலும், திருமலையிலும் போராட்டம் பரவித் தொடர்ந்தன.

அவர்கள்! எங்கள் தாயகப் பூமி பிரிக்க முடியாததென்று போர்தொடுத்தனர். ''அத்துமீறிய சிங்களக்குடியேற்றங்களை நிறுத்திவிடு! சிறையில் வாடும் தமிழிளைஞர்களை விடுவி!'' என வேண்டி நின்றனர்.

தனது மண்ணினதும், மக்களினதும் மீட்சிக்காகத் திருச்செல்வம் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தான். நீரையும் உணவையும் மறுத்து ஒரு கடுமையான போராட்டம் - அவனது போராட்டத்திற்கு ஆதரவாக வன்னியின் மக்கள் அனைவருமே அணிதிரண்டனர். சகல மக்களமைப்புகளும் அவனுடன் இணைந்து குரல் கொடுத்தன.

''இது புலிகளின் கோரிக்கைகள் மட்டுமல்ல; தமிழீழ மக்கள் அனைவரினதும் வேண்டுகோள்களாகும்.''
உண்ணாவிரத மேடை;
3வது நாள் !

திருச்செல்வம் சோர்ந்து படுத்திருந்தான். அந்த அழகிய வதனம் வாடிவிட்டது. மக்கள் அமைதியாகத் தம் உள்ளத்திலேயே அழுது கொண்டிருந்தனர்.

தூரத்தில்-ஓர் ஓரமாக அவனது தாயார்-தன் மகனை விழிவெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தாயின் கண்ணீரைக் கண்டு கலங்கக் கூடாது என அவன் எண்ணினான் போலும். அந்தப் புனிதமான தாயும் எங்களிடம் ஒன்றை வேண்டி இருந்தாள்.

''எனது பிள்ளை போராடட்டும், அவனது போராட்டம் மிகவும் சரியானதுதான்., ஆனால், இறந்தபின் எனது மகனைச் சிறிது நேரம் என்னிடம் தந்து விடுங்கள்.

என் தாபத்தை நான் தீர்க்க வேண்டும்.

அவனில் விழுந்து நான் அழ வேண்டும்.

அவன் இந்தத் தேசத்தின் புதல்வன் - என்றாலும் எனது வயிற்றிலும் பிறந்தவன்.'' விடுதலை உணர்வில் அந்தத் தாய் குறைந்தவள் அல்ல. அந்தத் தாயின் வேண்டுகோளும் பின்னர் ஒரு நாள் நிறைவேறத்தான் செய்தது.

உண்ணாவிரதப் போராட்டத்தின் ஆறாவது நாள் !

இந்தியப் படைத் தளபதி மேஜர் டாட்டா அன்று வந்திருந்தான். அங்கு கூடி இருந்த மக்களின் மன எழுச்சி இந்தியத் தளபதியின் மனதைக் கூட மாற்றி இருந்தது. அவன் மக்களிடையே கூறினான்.

''உங்களது போராட்டத்தின் நியாயம் எனக்கு விளங்குகிறது. இந்த மக்களின் மன உணர்வுகளும் எனக்கு விளங்குகிறது. எனக்கு மேலே இருப்பவர்களுக்கு இதை நான் தெரியப்படுத்துகிறேன். ஆனால், ஏனென்று தெரியவில்லை அவர்களுக்குப் பிரச்சனைகள் விளங்குவதே இல்லை. அந்த இந்தியத் தளபதியினால், ஆக்கிரமிப்பாளனின் நோக்கத்தை மறைக்க முடியாமல் போயிற்று.

திருச்செல்வம் மேடையில் வாடிக்கிடந்தான். அவனது தேகம் உருக்குலைந்துவிட்டது கண்கள் குழிவிழுந்து, முகம் களையிழந்து விட்டது. கூடி நின்ற மக்களின் கண்ணீருக் கிடையில் அவன் வாடி வதங்கிக் கிடந்தான். அன்று தான் திலீபனின் உயிர்த்தியாகம் பற்றிய செய்தி கிடைத்தது. ஆழ்ந்த சோகத்தில் இருந்த மக்களின் மனங்களில் அச்செய்தி இடிபோல இறங்கியது. மக்களின் ''ஓ'' வென்ற அழுகுரல் வானில் எழுந்து எங்கும் பரந்தது. திருச்செல்வம் பேச விரும்பினான் - தனது இறப்புக்கு முன்பு தனது இறுதிச் செய்தியைத் தான் நேசித்த மக்களுக்குச் சொல்ல விரும்பினான். களைத்துச் சோர்ந்துவிட்ட அவனிடத்திலிருந்து உடைந்த வார்த்தைகளாக அவனது உள்ளத்தின் உணர்வுகள் வெளிப்பட்டன.

''எனது அன்பான...... மக்களே...!...

திலீபன்...அண்ணாவின் வீரமரணம்...எனக்கு... ஒன்றை...உணர்த்தியது...... எனது சாவும்...உறுதியானது! இந்திய...வல்லாதிக்கம்... என்னையும் ... சாகடிக்கலாம்... ஆனால்...உங்களுக்கு... எனது இதயத்தின் வேண்டுகோள் ... ஒன்று...நீங்கள்...தலைவர் பிரபாகரனை ... நம்புங்கள் ... எமது... இயக்கத்தை ... நம்புங்கள். அவர்கள்மட்டும்தான் உங்களுக்காக...தங்கள்... உயிர்களையும்...தரத் தயாராக...இருக்கிறார்கள்.''

அவனது ஒவ்வொரு வார்த்தையும் மக்களின் பலத்த அழுகுரல்களுக்கு மத்தியில்தான் வெளிவந்தன. அவை வெறும் வார்த்தை ஜாலங்கள் அல்ல. தேசத்தை நேசித்த போராளி ஒருவனின் உள்ளத்தின் வெளிப்பாடு.

ஆறு நாட்கள்!

அது ஒரு மிகக் கொடிய நிகழ்வு!

உயிர் கொடுக்க, உணவை மறுத்து ஒரு நெடிய பயணம். ஆனாலும், திருச்செல்வம் காப்பாற்றப்பட்டான்.

லெப். கேணல். திலீபனின் வீர மரணம் - அதனால் ஏற்பட்ட தமிழீழ மக்களின் எழுச்சி - இந்தியாவைத் தம் நிலையிலிருந்து இறங்கி வரச் செய்தது.

திருச்செல்வத்தின் உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தப்பட்டது. அவனது ''சாவு'' அன்று தவிர்க்கப்பட்டது. மட்டக்களப்பிலும், திருமலையிலும் தொடர்ந்த உண்ணாவிரதப் போராட்டங்களும் இடை நிறுத்தப்பட்டன.

★ ★ ★

நீர் பாயும் வயல்வெளியின் ஓரக்காடு தான் - புலிகளின் அன்றைய பயிற்சி முகாம். சிற்றாறு சுற்றியோடும் பெருஞ்சோலைக்காடு. அங்கே கடுமையான பயிற்சியை இனிய முகத்துடன் சந்தித்துக் கொண்டிருந்தான் திருச்செல்வம். பயங்கரத்தைப் பாடும் ஆழக் கடலின் அலைகளுக்குள் வாழ்ந்தவன்., வலை வீசி, வலை வீசி உரத்துவிட்ட தேகம். சலிப்பு அவனுக்குத் தோன்றியதே இல்லை, கடலன்னை வளர்த்த பிள்ளை அவன்.

''கப்டன்'' லோறன்சின் அந்தப் பயிற்சி முகாமின் சிறந்த போராளிகளில் ஒருவனான திருச்செல்வம், ஆரம்பத்தில் மேஜர் பாலாவின் எல்லைப்புறக் காவல் குழுவில் ஒரு அங்கத்தவனாகச் செயற்பட்டான்.

இவர்களது படையணி சிறியதாக இருந்தாலும், கடுமையாகப்போராடியது. அவர்கள் எதிரிகள் நிறைந்த காடுகளையும், வெளிகளையும் அடிக்கடி கடக்க வேண்டி இருந்தது. பறிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்களில் உருவாகும் சிங்களக் குடியேற்றங்களை விரட்ட வேண்டி இருந்தது. அப்போதெல்லாம் திருச்செல்வம் ஒரு புதிய போராளி. போர் முனைக்கு அவன் புதியவன்; ஆனாலும், அக்குழுவின் சாதனைகளில் அவனது பங்களிப்பும் நிறைந்திருந்தது. அவர்கள் எல்லைக் கிராமங்களின் காவலர்களாக, எம் தேசத்தைக் காக்கப் போரிட்டனர்.

சிறீலங்கா இராணுவத்தினரது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களிலும் திருச்செல்வம் பங்கு பற்றினான். அப்பொழுதுதான் அவன் பசிலனின் குழுவில் ஒருவனாக மாறினான். பசிலனில் அவன் மிகுந்த அன்பை வைத்திருந்தான். அவர்களிடையே நிலவிய உறவு, ஒரு போர்வீரனுக்கும் தளபதிக்குமிடையே உள்ள தொடர்பல்ல, அதற்கும் மேலாக ஒரு பாசத்தின் பிணைப்பு அவர்களிடையே நிலவியது!

அவர்கள் முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் தாக்குதல்களை மேற்கொண்டனர். நகரங்களிலும், கிராமங்களிலும் எல்லைப்புறங்களிலும், அவர்களின் படைப்பிரிவு இராணுவத்திற் கெதிரான தாக்குதல்களை மேற்கொண்டது.

அந்த நாட்களில் கிராமப்புறங்கள்தான் எங்களது மறைமுக வாழ்வின் தளங்களாக இருந்தன. அந்த மக்களின் அன்பும், கனிவுந்தான் எங்களைக் காத்து நின்றது! கிராமப்புறத்து மக்களிடையே எப்பொழுதும் திருச்செல்வம் ஒன்றிவிடுவான். யாருடனும் இலகுவாகவும், அன்பாகவும் பழகிவிடும் அவனது தன்மையால் கிராமத்தவரிடையே அவன்பெருமதிப்பைப் பெற்றிருந்தான். அம்மக்களின் உணர்வுகளை இலகுவில்விளங்கிக் கொண்டு அவர்களை நேசித்ததால்தான் அவனில் அந்தக் கிராமங்களின் மக்கள் உயிரையே வைத்திருந்தனர். மக்களை நேசிப்பவனே ஒரு உண்மைப் போராளியாக இருக்கமுடியும். புலிகளின் ஒவ்வொருபோராளியும் தமதுமக்களை மிகவும் நேசித்ததனால் தான் அவர்களால் இறுதிவரை உறுதியுடன் போராட முடிந்தது.

இந்த நிலையில்தான் - எங்களது நலன் பேணுவதென்று காரணம் சொல்லி-அமைதிப் படை என்ற வடிவத்தில் அன்னிய இராணுவம் எம் தேசத்தில் நுழைந்தது!

மாக நடந்து கொண்டனர். நேற்று வரை நேசங் கொண்டாடிய இந்தியப் படையினர், இன்று கோபங் கொண்டு எம் மக்களுக்குஉதைத்தனர், அடித்தனர்-கை கால்களைக் கட்டி உச்சி வெயிலில் தெருவில் போட்டனர். தங்களின் உண்மை வடிவத்தைத் தெளிவுபடுத்தி-அன்னிய ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தத்தைத் தொடங்குமாறு செய்தி கூறிச் சென்றனர்.

இந்தியப் படைகளுடனான ஒரு யுத்தத்தைத் தவிர்க்கமுடியாது என்பதை திருச்செல்வம் நன்கு அறிவான். நமது மண்ணில் வாழும் மக்களினது சுதந்திரத்தையும், மகிழ்ச்சியையும் சிதைக்க வந்த இந்தியப் படையுடனான யுத்தத்திற்குப் புலிகள் தயாராகவே இருந்தனர்.

இருள் சூழ்ந்த பனிக்காலக் காலைப் பொழுதொன்றில்-மரங்கள் சூழ்ந்த அடர் காட்டின் துண்டொன்றில்இந்தியப் படைக்கு, முல்லைத்தீவில் முதலடி! அன்று இந்தியப்படை தனது இரு பெருங் கவச வாகனங்களை அதிலிருந்தசிப்பாய்களுடனேயே இழந்து நின்றது. அது தொடர்ந்த யுத்தத்தின் ஒவ்வொரு நாளும் இந்தியப் படையணிக்குப் பெரும் இழப்பு, ஆனாலும் புலிகளின் தாக்குதல்அணிக்குத்தலைமை தாங்கிய மேஜர் பசிலன் வீர

"எனது அன்பான மக்களே!

திலீபன் அண்ணாவின் வீரமரணம் எனக்கு ஒன்றை உணர்த்தியது. எனது சாவும் உறுதியானது! இந்திய வல்லாதிக்கம் என்னையும் சாகடிக்கலாம். ஆனால், உங்களுக்கு எனது இதயத்தின் வேண்டுகோள் ஒன்று. நீங்கள் தலைவர் பிரபாகரனை நம்புங்கள். எமது இயக்கத்தை நம்புங்கள்! அவர்கள் மட்டும்தான் உங்களுக்காகத் தங்கள் உயிர்களையும் தரத் தயாராக இருக்கிறார்கள்."

இந்தியாவை விரும்பி நாம் அழைக்கவில்லை.போலிமுகத்திரையில் புகுந்துவிட்ட அன்னியனை எமது மக்களுக்கு நாம் அடையாளங் காட்ட வேண்டி இருந்தது. எமது தேசம் நடாத்திய அகிம்சைப் போராட்டங்களின், இறுதியில் ஆக்கிரமிப்பாளனின் உண்மை வடிவம் தெரியத் தொடங்கியது.

ஒருநாள் அதிகாலை வேளையொன்றில் முல்லைத்தீவின் கிராமங்களை வளைத்துக் கொண்ட இந்தியப் படையினர், ஏனோ முரட்டுத் தன

மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

அது ஒரு சோகமான நாள்!

திருச்செல்வத்தின் கரங்களில் பசிலன் துவண்டு போய்க் கிடந்தான். அவனது தலையிலிருந்து சிந்திய இரத்தம் திருச்செல்வத்தினது கைகளிலும், நெஞ்சத்திலும் பரவிக் கிடந்தது. பசிலனின் இழப்பு தாங்க முடியாதது தான். ஆனால்,இதற்குஎமதுபதிலைச் சொல்லத்தான் வேண்டும். திருச்செல்வத்தினால் பசில

(11-ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com




# அமைப்பு விதிகள்

தமிழீழப் பகுதியில் பல வருடங்களாக நடந்த போரினால் சட்டம், ஒழுங்கு முறையாகப் பேணப்படவில்லை. சட்டம், ஒழுங்கு ஓரளவு முறையாகப் பேண அமைக்கப்பட்டவைகளே தமிழீழ இணக்க மன்றுகள் ஆகும்.

இந்த இணக்க மன்றுகள் மூலம் மக்கள் பெருமளவில் பயனடைந்தார்கள்.

1. அந்தந்த ஊரில் வாழ்ந்து வருபவர்களும், ஊரின் நிலைமையை முழுமையாக நன்கறிந்தவர்களும், மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களுமே மன்றில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

   அதனால் பிணக்குகளை அவர்கள் எளிதில் விளங்கி, குறுகிய காலத்தில் நீதி வழங்கினார்கள்.

2. பெருமளவில் பணத்தைச் செலவழித்து, நேரத்தைச் செலவழித்து, அரச நீதிமன்றம் சென்று பிணக்குகளுக்குத் தீர்வு காணவேண்டிய தேவைகள் இருக்கவில்லை.

3. பணமுள்ளவர்களால் தமக்கேற்ற முறையில் வழக்குகளின் தீர்ப்புகளை மாற்றமுடியாதிருந்தது.

4. சாதாரண ஏழைகள், ஒருகாலத்தில் பணமின்றி நீதிமன்றம் செல்லமுடியாதிருந்தவர்கள், பணப்பலம் கொண்டோரால் ஒடுக்கப்பட்டவர்கள், எல்லோரும் இவ் இணக்க மன்றுகள் மூலம் பெரும் பயனடைந்தார்கள்.

5. ஒவ்வொரு ஊர்மக்களும் பிணக்குகளைத் தமக்குள்ளே பேசித் தீர்த்துக் கொள்ளும் அளவிற்குப் பக்குவம் பெற்றுள்ளார்கள்.

எனவே, இம் மன்றுகள் மக்களுக்குப் பணச்செலவு அதிகமின்றி காலதாமதமின்றி, குறுகிய காலத்தில் எந்தச் சிக்கல்களையும், தீர்த்துவைத்து நீதித்துறையில் பெரும் பங்காற்றி வருகின்றன.

இம்மன்றுகள் அனைத்துமே நேர்மையாக, ஒழுங்காக நடப்பதை மேற்பார்வை செய்ய வே.. டியது அவ்வூர் மக்களின் கடமையாகும்.

இது உங்கள் இணக்க மன்று. இதனைச் சிறப்பாகச் செயற்படச் செய்வது உங்கள் பொறுப்பு.

இம் மன்றுகள் சிறப்பாகச் செயற்படுவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவார்கள்.

## 1. சிற்றூர் இணக்க மன்று

### அமைப்பும் அதிகாரமும்

1. வசதிக்கேற்றபடி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிற்றூர் அவைப்பிரிவுகள் தோறும் ஒவ்வொரு சிற்றூர் இணக்க மன்று அமைக்கப்பட்டு இயங்கும்.

2. தமிழீழ மக்களின் தேசவழமைச்சட்டம், உரோமன்டச் சட்டம், முஸ்லீம் மக்கள் தொடர்பான சட்டங்கள், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும், மனிதாபிமான அடிப்படையிலும், சமுதாய நீதிகளை அடிப்படையாகக் கொண்டும் பிணக்குகள் விசாரிக்கப்பட்டு, தீர்வு காணப்படல் வேண்டும்.

3. முறைப்பாடு தாக்கல் செய்யப்படுவதற்குக் கட்டணமாக ரூபா 25/- அறவிடப்படும். முறைப்பாட்டாளர் வறுமைக் கோட்டுக்குட்பட்ட நபரென இணக்க மன்று தீர்மானிக்கின், இக்கட்டணம் ரூபா 10/- ஆகக் குறைக்கப்படும். முறைப்பாட்டுப் படிவத்தில் பிணக்கைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதி, செயலாளரிடம் கையளித்தல் வேண்டும்.

4. குறித்த சிற்றூர் அவை எல்லைக்குள் நிரந்தரமாய் வசிக்கும் 18 வயதுக்குமேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டமொன்றில் இணக்கமன்று உறுப்பினர்களாக, பொது மக்களால் (5) ஐந்து பேரும், தமிழீழ விடுதலைப்புலிகளால் (5) ஐந்துபேருமாகமொத்தம் (10) பத்துப்பேர் பிரேரிக்கப் படுவார்கள். இவர்களுக்கு எதிராக யாரும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினால், இரகசியமான முறையில் தெரிவிக்கலாம். ஆட்சேபனை உண்மையானதெனக்காணப்படின், வேறு ஒருவர் பிரேரிக்கப்படுவார். இதன்பின் கூட்டப்படும் கூட்டத்தில் நடைபெறும் வாக்கெடுப்பில் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல்(7) ஏழுபேர் இணக்கமன்று உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர். மிகுதி (3) மூவர் மேலதிக உறுப்பினர்களாக இருப்பார்கள். வாக்கெடுப்பின் பின்னர் எழுப்பப்படும் ஆட்சேபனைகள் நிராகரிக்கப் படும். இணக்க மன்று உறுப்பினர்களில் யாராவது, சமூகமளிக்காத சந்தர்ப்பத்தில் அல்லது விலகும்போது, மேலதிக உறுப்பினர்களில் இருந்து அவ் வெற்றிடத்துக்கு இணக்க மன்றுப் பொறுப்பாளரின் உதவியுடன் உறுப்பினர் நியமிக்கப் படுவார்.

   உறுப்பினர்கள் சகலரும் சமமான அதிகாரத்தைக் கொண்டிருப்பர். இவர்கள் தமக்குள் ஒரு செயலாளரையும் துணைச் செயலாளரையும், பொருளாளரையும் தெரிவு செய்து கொள்ளவேண்டும்.

5. இணக்க மன்றுகளுக்கு வட்டாரீதியாக ஒரு பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுவார். இவர் இணக்கமன்றுகளை மேற்பார்வை செய்வார். ஆயினும் விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கமாட்டார்.

6. கொலை, கற்பழிப்பு, கொள்ளைபோன்றபுலன் விசாரணைக்குரிய பிணக்குகளை இணக்க மன்றின் விசாரணைக்கு எடுத்தல், தவிர்க்கப்படல் வேண்டும். ஆனால், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சண்டை போன்ற நிகழ்வுகள் நடந்த இடங்களுக்கு உறுப்பினர்கள் உடன் சென்று, பார்வையிட்டு, தமது அறிக்கையை இணக்க மன்றுப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், அவ்விடத்தில்விசாரணை செய்யமுடியாது.

7. பிணக்குகளுக்கு இணக்கம் அல்லது தீர்ப்பு வழங்கும் போது அபராதமோ, நட்ட ஈடோ, தண்டனையோ வழங்க இணக்க மன்றுக்குஅதிகாரமுண்டு.

8. விசாரணைக்குத்தொடர்ந்து அறிவித்தல் தராமலும், தகுந்த காரணமின்றியும், (2) இரண்டு தவணைக்குச் சமூகமளிக்கத் தவறும் முறையீட்டாளரின் முறைப்பாடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அதேபோல குற்றம் சாட்டப்பட்டவரும், சாட்சிக்காரரும், தொடர்ந்து (3) மூன்று தவணைக்குத்தகுந்தகாரணமின்றி சமூகமளிக்கத் தவறும் பட்சத்தில் அது பற்றி இணக்க மன்றுப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

9. இணக்க மன்றில், இருபகுதியினரும் மனமொருமித்து இணக்கம் செய்து கொண்ட சமாதானத்தீர்வை உதாசீனம் செய்ய முடியாது.

10. ஓர் இணக்க மன்றின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் அப்பகுதி இணக்க மன்றில் மட்டுமே முறைப்பாட்டைத்தாக்கல்செய்ய முடியும். குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது இணக்க மன்றின் எல்லைக்கு அப்பால் வசிப்பவராயின், அவர் வதியும் பகுதியிலுள்ள இணக்க மன்றுக்கு முறைப்பாடு செய்ய முடியும். பெண்களுக்கு எதிரான குடும்பப் பிணக்குகள் சம்பந்தமான முறைப்பாடுகள் குறித்த பெண்வசிக்கும் எல்லைக்குள் உள்ள இணக்க மன்றிலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும். அத்துடன் காணி தொடர்பான பிணக்குகளும், குறித்த பிணக்கில் சம்பந்தப்பட்ட காணி அமைந்துள்ள சிற்றூர் இணக்க மன்றிலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும்.

11. இணக்க மன்றின் எல்லைக்கு வெளியே வசிக்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கான அல்லது சாட்சிக்காரருக்கான அழைப்பாணையை அப்பகுதி இணக்க மன்றுக்கு ஊடாக அனுப்பலாம்.

12. இணக்க மன்று மண்டபத்தில் சமுகமளிக்கும் எவரும் மது அருந்திய நிலையில் வருவதோ, அல்லது புகைத்தலோ, அல்லது தேவையற்ற வார்த்தைகள் பேசுவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

13. எந்த விதத்திலும் இணக்கம் காண இயலாத பிணக்குகளை இணக்க மன்றுனர் நன்கு அலசி ஆராய்ந்தபின் தமது அறிக்கையை மன்றப் பொறுப்பாளருக்கு வழங்கமுடியும். ஆனால், எவ்விதத்திலும் தமது முடிவைக் குறித்த பகுதியினர் ஏற்கும்படி வற்புறுத்த முடியாது.

## 2. மேன் முறையீட்டு இணக்க மன்று

### அமைப்பும் அதிகாரமும்

1. வசதிக்கேற்றபடி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்ட அவைப்பிரிவுகள் தோறும் ஒவ்வொரு மேல் முறையீட்டு இணக்க மன்று அமைக்கப்பட்டு இயங்கும்.

2. மேன் முறையீட்டு இணக்க மன்று விசாரணைக் குழுவில் (5) ஐந்து பேர் அங்கம் வகிப்பர். இவர்களில் (2) இருவர் தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுவர். (3) மூன்று பேர் சிற்றூர் இணக்க மன்று உறுப்பினர்களிடையே தேர்தல் மூலம் நியமிக்கப்படுவர். இவர்கள் அனைவரும் சமமான அதிகாரத்தைக் கொண்டிருப்பர். அத்துடன் ஒரு செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தெரிவு செய்து கொள்வர். வெற்றிடமான உறுப்பினர் ஒருவரின் இடத்துக்கு ஒருவர் இணக்க மன்றுப் பொறுப்பாளரின் உதவியுடன் நியமிக்கப்படுவார்.

3. அவ்வப்பகுதி வட்ட அவைப் பிரிவுக்குட்பட்ட சிற்றூர் இணக்கமன்றுகளின் தீர்ப்புகளுக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்படும். பிணக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்க மேன் முறையீட்டு இணக்கமன்றுக்கு அதிகாரமுண்டு.

4. சிற்றூர் இணக்க மன்றுகளின் தீர்ப்புக்கெதிராக மேன் முறையீடு செய்ய விரும்புபவர்கள் தீர்ப்பு வழங்கி, 14 நாட்களுக்குள் மேன் முறையீடு செய்தல் வேண்டும்.

5. மேன் முறையீடு தாக்கல் செய்வதற்குக் கட்டணமாக ரூபா, 100/- (நூறு) அறவிடப்படும். ஆனால், மேன் முறையீடு செய்பவர் வறுமைக்கோட்டுக்குட்பட்ட நபரென விசாரணை மன்று தீர்மானிக்கின் இக் கட்டணம் ரூபா, 50/- (ஐம்பது) ஆகக் குறைக்கப்பட வேண்டும்.

6. இணக்க மன்றுத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்ய விரும்புபவர், குறித்த பிணக்கை விசாரித்த சிற்றூர் இணக்க மன்றுச் செயலாளரிடம் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தைபெறலாம். அப்படிவத்தில் பிணக்கு விபரத்தையும், மேன் முறையீடு செய்வதற்கான காரணத்தையும் சுருக்கமாகக் குறிப்பிட்டு அதற்குரிய கட்டணத்தையும் மேன் முறையீட்டு விண்ணப்பப் படிவத்தையும், மேன் முறையீட்டு இணக்க மன்றுச் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அவர் குறித்த பிணக்குத் தொடர்பான கோவைகளையும், ஆவணங்களையும் சிற்றூர் அவை இணக்கமன்றுச் செயலாளரிடம் பெற்று விசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

## 3. விசாரணை முறைகளும் நடைமுறைகளும்

1. விசாரணை மண்டபத்தில் ஒழுங்கும் அமைதியும் பேணப்படல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிணக்கும்' இணக்க மன்றில் (5) ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவாலும், மேன் முறையீட்டுமன்றில் (3) உறுப்பினர்களைக் கொண்ட குழுவாலும் விசாரிக்கப்படல் வேண்டும்.

3. குறித்த பிணக்குக்கும் விசாரணைக்குழு உறுப்பினருக்கும் தொடர்பு இருப்பின் குறித்த உறுப்பினர் அவ்விசாரணையிலிருந்து பூரணமாக ஒதுங்கி இருக்கவேண்டும்.

4. விசாரணையின் போது கடும்வார்த்தைப் பிரயோகமோ, துன்புறுத்தலோ, மிரட்டலோ மேற்கொள்ளப்படலாகாது.

5. விசாரணையின் போது பெறப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணை மன்று உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாகக் கலந்தாலோசித்துக் குறித்த இருபகுதியினரும் இணங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. உணர்வுடன் கூடிய குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை செய்யும்போது அவதான

(10ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

## தமிழீழ இணக்க மன்று . . .

மாக இருந்து, இரு தரப்பினரையும் இணங்கவைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

7. குடும்பம் தொடர்பான பிணக்குகளை விசாரிக்கும் போது முறையீட்டாளர் குற்றம் சாட்டப்பட்டவர்கேட்கும்சந்தர்ப்பத்தில், பார்வையாளர் அனைவரும் விசாரணை மண்டபத்தில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும். ஒரு பெண்ணை விசாரிக்கும் போது இன்னுமொரு பெண் அவருக்குப் பக்கத்தில் அல்லது பார்க்கக்கூடிய தூரத்தில் இருக்க வேண்டும்.

8. அரச நீதிமன்றுகளில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளைக் குறித்த இரு பகுதியினரது எழுத்து மூலமான ஒப்புதலின்றி விசாரணை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

9. விசாரணைக்கு வரமுடியாத உறுப்பினர்கள் அது பற்றி விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

10. இணக்க மன்று உறுப்பினர் ஒருவர் குறித்த விசாரணையிலிருந்து விலகியிருக்க வேண்டுமென கருதும் எவரும்அதுபற்றி விசாரணை தொடங்கு முன்பு இணக்கமன்றுப் பொறுப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

### 4. விசாரணைக்குழு உறுப்பினர்களுக்கான ஒழுங்கு விதிகள்

1. விசாரணையின் போது புகைத்தல், மதுபானம் அருந்திய நிலையில் இருத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

2. விசாரணை மன்று உறுப்பினர்எவரும் தனிப்பட்ட முறையில் எந்தவொரு பிணக்கையும் விசாரிப்பதோ, அல்லது வேறு இடங்களில் விசாரிப்பதோ, பிரஸ்தாபிப்பதோ கூடாது.

3. விசாரணை சம்பந்தமாக உறுப்பினர்கள் அன்பளிப்போ நன்கொடையோ பெற்றுக் கொள்வது கூடாது.

4. எந்தவொரு பிணக்கிலும் சொந்தம், பந்தம் ஆகிய தொடர்புகளை களைந்து நடுநிலைநின்று, குறித்த இரு .. தரப்பினருக்கிடையே ஏற்பட்டுள்ள பிணக்கை தீர்த்து இணக்கம் காணவேண்டும்.

5. இரு பகுதியினருக்குமிடையே ஏற்பட்டுள்ள பிணக்கைத்தீர்த்து இணக்கம் காண வேண்டும். இரு பகுதியினருக்கிடையே இணக்கம் காணப்பட்ட தீர்வை நிறைவேற்றுவதில் இடையூறு ஏற்படின் அது பற்றி இணக்க மன்றுப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

6. இணக்க மன்று உறுப்பினர்கள் மாதம் ஒரு தடவை ஒன்றுகூடி இணக்கமன்றுக் கூட்ட அறிக்கைகளையும், கணக்கு அறிக்கைகளையும், இணக்க மன்றுப் பொறுப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

7. இணக்க மன்றில் உள்ள உறுப்பினர்கள் எவரும் அதிகாரத்தைத்தவறாகப் பயன்படுத்தினால் அல்லது உறுப்பினர்களுக்கான ஒழுங்கு விதிகளை மீறியதாகக் காணப்படின், அவர்உடனடியாக இணக்க மன்றிலிருந்து விலக்கப்படுவார்.

### 5. இணக்கமன்றுகளுக்கு பொதுமக்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்குரிய தகைமைகள்

1. குறித்த சிற்றூர் அவைப் பிரிவுகளில் நிரந்தரமாக வசிப்பவராயும், (30) முப்பது வயதுக்கு மேற்பட்டவராயும், நன்நடத்தையும் ஒழுக்கமும், சமூகத்தில் நன்மதிப்புப்பெற்றவராயும், அனுபவம் வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும்.

2. மோசடி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதை மருந்து வியாபாரம் போன்ற சமூக விரோதச்செயல்களில் ஈடுபடாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கடந்த காலங்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(EPRLF) ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் (PLOT) போன்ற துரோக இயக்கங்களில் உறுப்பினராக இருந்த துரோகிகளுக்கும், தமிழீழ மக்களின் புனிதப் போருக்கு விரோதியாகச் செயற்பட்ட சமூக விரோதக் கும்பல்களுக்கும், காட்டிக்கொடுத்த கயவர்களுக்கும், இவர்களுக்கு ஆதரவு தந்த அடிவருடிகளுக்கும், இவ் இணக்கமன்றுகளில் உறுப்பினராக இருக்க அருகதை இல்லை.

### 6. செயலாளர் கடமைகள்

1. முறைப்பாட்டுப் படிவத்தை வழங்குதலும், பதிவுகளைப் பேணலும்.

2. பிணக்குகளுடன் தொடர்பானவர்களுக்கு, அழைப்பாணைகளை விசாரணை தினத்துக்கு (7) ஏழுநாட்களுக்கு முன்பு அனுப்பி வைத்தல்.

3. விசாரணைக் குழுக் கூட்டத்தை ஒழுங்கு செய்தல்

4. மன்றின் அறிக்கைகளையும், தீர்வுகளையும், மறு உறுப்பினர்களுடன் இணைந்து தயாரித்தல்.

5. இணக்க மன்றுப் பொறுப்பாளருடன் இணக்க மன்று விடயம் தொடர்பாக தொடர்பு கொள்ளல்.

6. விசாரணை நடைபெறும் தினத்தின் நிகழ்வு, அறிக்கையை தயாரித்து இணக்க மன்றின்பொறுப்பாளர் ஊடாக வட்ட அவைப்பிரிவுப் பொறுப்பாளருக்கு அனுப்பிவைத்தல்.

### 7. பொருளாளரின் கடமைகள்

1. வரவு செலவுப் பதிவேடுகளைப் பேணுதலும், பற்றுச் சீட்டு வழங்குதலும்.

2. வரவு செலவுக் கணக்கு தயாரித்தல்

3. மாதாந்த வரவு செலவுக் கணக்கு அறிக்கைகளை இணக்கமன்றின் பொறுப்பாளர் ஊடாக வட்ட அவைப்பிரிவுப் பொறுப்பாளருக்கு அனுப்பி வைத்தல் என்பன.

★




எரிமலைப் புலிகள் இருபத் திருவரை
திருமலைக் கடல் தின்று தீர்த்ததாம்...
தன் நீர் போதா தென்று கடல்எம்
கண்ணீர் கேட்டுக் கைநீட்டியதாம்
இப்பெரும் துன்பம் எப்படிச் சுமப்போம்?

வெறிச்சிங் களப்படை விலாவை உடைத்தவர்
குறிவைத் திந்தியப் படைகொன்றழித்தவர்
மாற்றார் அழிக்க முடியா மறத்தினர்
காற்றில் கடலில் கவிழ்ந்து போனதாம்...
இப்பெரும் துன்பம் எப்படிச் சுமப்போம் ?

மான மாமலைத் தோள்கள் சாய்ந்ததாம்...
கோணை மாமலைக் குடும்பம் மடிந்ததாம்...
நிலையாய்த் தமிழினம் நிமிரக் குமுறிஓர்
அலையாய் எழுந்தவர் அலையில் முடிந்ததாம்...
இப்பெரும் துன்பம் எப்படிச் சுமப்போம் ?

வளம் மிகுந்த வாழைக் குருத்துக்கள்
இளம் பருவப் பிறை நிலவுகள்
வாழும் காலம் வாழாது வலையில்
வீழும் மீனாய் வீழ்ந்து சரிந்ததாம்...
இப்பெரும் துன்பம் எப்படிச் சுமப்போம் ?

கிடைத்தற் கரிய கிளர்ச்சி நெருப்பினர்
அடைத்த சிறையின் ஆணிவேர் பேர்த்தவர்
முற்றிப் பழுத்த முழுத்தமிழ் வீரர்
பற்றி இழுத்த அலையில் படுத்ததாம்...
இப்பெரும் துன்பம் எப்படிச் சுமப்போம் ?

நஞ்சு மாலை கடலில் தொலைந்ததாம்...
அஞ்சி டாதார் உடல்கள் அழிந்ததாம்...
நாளைப் போரை நடத்த இருந்தவர்
தோளை மீன்கள் தின்று தொலைத்ததாம்...
இப்பெரும் துன்பம் எப்படிச் சுமப்போம் ?

★

(06-02-90 அன்று திருகோணமலைக் கடலில் ஏற்பட்ட படகு விபத்தில் வீரமரணமடைந்த எம் தோழர்கள் நினைவாக......)

www.eelamview.com

## மக்கள் சக்தியே . . .

இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப் பெரிய சவாலாக அமைந்தது. முதன்முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையைச் சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள்மீது ஒரு முழு அளவிலான யுத்தம் ஏவிவிடப்பட்டபோது, எமக்காகக் குரல் கொடுக்கவோ, அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை. உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்தியத் தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்குத் துணைபோயின.

நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத்தீயை அணையவிடாது போராடினோம்.

இறுதியில் நாம் வெற்றி கண்டோம்.

இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனம் தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

இந்த வெற்றியானது தமிழீழ மக்களாகிய உங்களது வெற்றி. உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி. உங்கள் இயக்கமாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெற்றி.

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றிகொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்றுகொண்டிருக்கிறது. மலைபோல, மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும்வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

இன்றைய எழுச்சித் தினத்தில், இந்திய அரக்கனை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துவோமாக.''

## மக்கள் முன்னணிச் செய்திகள்

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கேற்ற ஒரு அரச நிர்வாக அமைப்பு உருவாக்கப்படவில்லை. மாகாணசபைத் தேர்தலுக்கான தேதி குறிப்பிடப்படவில்லை. இப்படியான ஒரு அரசியல் சூன்ய நிலையில் சிங்கள இனவாத அழுத்தத்திற்குப் பயந்து சிங்கள அரசு விடுதலைப் புலிகளுடன் ஒரு உடன்பாடு காணத் தவறுமானால், தமிழ் மக்களுக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலை தோன்றும். இச் சூழ்நிலையில் நாம் உறுதியுடன் எமது மண்ணை மீட்பதற்காகப் போராட வேண்டும்.

சிங்கள மக்கள் முப்படைகளையும் கொண்ட 70,000 ஆயுதம் தாங்கிய ஓர் இராணுவ இயந்திரத்தை வைத்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் ஒரு சிறந்த பாதுகாப்புப் படையாக இருக்கிறது. ஆகவே, நாம் எந்தச் சூழ்நிலையிலும் எமது ஆயுதங்களைக் கைவிட முடியாது.

நாம் சிங்கள அரசுக்கு இறுதியாக ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளோம். இதைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க, பாதுகாப்பிற்கான வழி செய்ய சிங்கள அரசு தவறினால் எமது மக்கள்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால் நாம் மீண்டும் ஆயுதம் ஏந்தி எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

கடந்த ஒருவருட காலப் பேச்சில் நாம் எமது மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேசவில்லை. ஏனெனில், எமது மக்களுக்கான நிரந்தரத் தீர்வு என்ன என்பது எங்களுக்குத் தெரியும், உங்களுக்கும் தெரியும்.

தற்போது, எமது அடிப்படை அரசியல் உரிமைக்கான சுயநிர்ணய உரிமைக்கு ஆப்பு வைக்கும் 6வது திருத்தச் சட்டமூலத்தை நீக்கவேண்டும் என நாம் அரசைக் கேட்டுள்ளோம். நாம் அதில் கண்டிப்பாக உள்ளோம்.

பேச்சுக்களின் ஆரம்பத்தின்போது எமது மக்கள் பெரிய நெருக்கடியில் இருந்தார்கள். இந்தியப் படையின் அட்டூழியம் ஒருபுறம், இலங்கைப் படையின் அடக்குமுறை ஒரு புறமுமாக இருந்தன. இச் சூழ்நிலையில் மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்வைக் கொடுக்க இடைக்கால முடிவொன்றை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் நாம் இருந்தோம்.

இதன்பின் மாகாண சபையை ஒரு இடைக்கால நிர்வாகமாக அங்கீகரித்தோம். இதன் மூலம் மக்களுக்கு நிவாரணத் திட்டங்களை ஏற்படுத்லாம் என்பதாலேயே அங்கீகரித்தோம்.

(01-05-90 யாழ் நகரில் திரு. அன்ரன் பாலசிங்கம்)

★ ★ ★

தமிழ் பேசும் இனத்தின் மொழி-மண்-பண்பாடு ஆகியவற்றை சிறிலங்கா அரசு அழிக்க முயன்றதாலேயே தமிழீழ விடுதலைப் போர் முளைவிட்டது.

சிங்கள மொழியில் ஐம்பது வீதம் தமிழ்ச் சொற்கள் இருப்பதாக சிங்கள அறிஞர்களே கூறியுள்ளனர்.

தமிழில் இருந்து சொற்களைப் பெற்று சிங்கள மொழியை உருவாக்கியவர்கள், கொழும்பு கடைப் பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்களைத் தார் பூசி அழித்தார்கள். யாழ் நூலகத்தில் தமிழ் எழுத்துக்களைத் தார் பூசி அழித்தார்கள். யாழ் நூலகத்தில் தமிழ் நூல்களை எரித்தார்கள். தமிழ்ப் பாடல்களை எழுதிய வள்ளுவர் சிலையை, ஔவை சிலையை உடைத்துத் தகர்த்தார்கள்.

சிங்களவர்களின் முதாதை என்று கருதப்படும் விஜயன் ஒரு சிங்களவனாக இருக்கவில்லை. அவன் இங்கே வந்து 1000 ஆண்டுகளுக்குப் பின்பே சிங்கள மொழி தோன்றியதாகச் சொல்கிறார்கள். விஜயன் இலங்கைக்கு வந்தபோது இந்த மண் தமிழ் மண்ணாக இருந்தது. இலங்கை என்ற தூய தமிழ்ச் சொல் தான், பின்பு 'லங்கா'' என்று சிங்கள மொழியில் அழைக்கப்பட்டது. விஜயன் நாதியில்லாமல் இங்கே வந்தபோது இந்த மண்ணில் அவனுக்குந்த இடம் கொடுத்தோம். இன்று, நம்மண்ணினை அவன் சந்ததியினர் பறித்து-தமிழ் ஊர்களையெல்லாம் சிங்கள ஊர்களாக்கி வருகிறார்கள். அம்பாறையை, அல்லை-கந்தளாயைத் தனதாக்கினர். முதலிக்குளத்தை மொரவேவா ஆக்கினர். தேக்கிலூற்றைச் சிங்கபுரமாக்கினர். மணல் ஆற்றை வெலிஓயா ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழனுக்கென்றொரு பண்பாடு உண்டு. ஒழுக்கமான இல்லற வாழ்வு நம்முடையது. அந்த ஒழுக்கத்தைப் பெரிதாய் ஓம்பிய கண்ணகியின் வழிபாட்டை கஜபாகு என்ற சிங்களவர்களின் இன்னொரு முன்தோன்றல் இலங்கைக்குக் கொண்டு வந்தான். இங்கே அந்தப் பத்தினிக்குக் கோயில் கட்டினான். அந்தப் பண்பாட்டைச் சிங்களவரிடையே பரப்பினான்.

ஆனால், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சிங்களப் படை வெறியர்கள் காரைதீவு கண்ணகி கோயிலை உடைத்து அழித்தார்கள். இது மட்டுமல்ல தமிழ்ப் பெண்கள் பலரைப் பாலியல் வன்முறையால் வதைத்துக் கொன்றார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் சிங்களவர்கள் நம்மிடம் மொழியைப் பெற்று நமது மொழியையே அழித்தார்கள்.

நம்மிடம் மண்ணைப் பெற்று நம் மண்ணையே அழித்தார்கள். நம்மிடம் பண்பாட்டைப் பெற்று நம் பண்பாட்டையே அழித்தார்கள். இந்த அநீதியை எதிர்த்துத்தான் நாம் போராடுகிறோம்.

(24-04-90 மூதூரில் கவிஞர் காசி ஆனந்தன்)

## சுயநிர்ணய உரிமையும் . . .

கங்களின் பிரச்சனையை ஆராய்ந்து சங்க முடிவின்படி ஏற்ற நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என்றும் ஆனால், அரசியல் பதவிகளை தமிழீழ மக்கள் சார்பில் வகிப்போர், 6வது திருத்தச் சட்டத்தின்படியான சத்தியப் பிரமாணத்தை எடுக்கக் கூடாதுஎன்றும், தனதுநிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தது. ஈற்றில் தமிழீழ மக்கள் சார்பில் அரசியல் பதவி வகித்த கூட்டணியினர் சத்தியப்பிரமாணம் எடுக்காது தமது பதவிகளைத்துறந்தனர். அரச மற்றும் ஒத்த நிறுவனங்களில் தொழில் புரிந்தோர் சத்தியப் பிரமாணம் செய்து தங்கள் தொழில்களைப் பாதுகாத்துக் கொண்டனர். கூட்டணியினர் பதவிகளைத் துறந்ததைத் தொடர்ந்து ஜெயவர்த்தனா அரசின் பதவிக்காலம் முடியும் வரை தமிழீழ மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமின்றியேயிருந்தனர். இக்காலகட்டத்தில் நிறைவேற்றப்பட்ட எந்தச்சட்டத்தையும் தமிழீழத்தில் அமுல் செய்ய அரசிற்கு உரிமை கிடையாது. தமிழீழ மக்களும் இவற்றிற்குக் கீழ்ப்படியத் தேவையில்லை.

### கூட்டணியும் தமிழ்க் குழுக்களும் மீண்டும் பாராளுமன்றம்

1988ல் வீரம் காட்டி பாராளுமன்றத்திலிருந்து வெளியேறிய கூட்டணியினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். காரரும் 1988ல் 6வது திருத்தம் அமுலில் இருக்கத்தக்கதாக அத்திருத்தச்சட்டத்தின் கீழான சத்தியப் பிரமாணமும் செய்துகொண்டு பாராளுமன்ற; மாகாணசபை அரசியல் பதவிகளைப் பற்றிக் கொண்டது தமிழீழ மக்களின் அரசியல் முன்னேற்றப் பாதையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்றே சொல்ல வேண்டும்.

ஆறாவது அரசியல் திருத்தச்சட்டம் என்பது தமிழீழ மக்களின் அரசியல் வளர்ச்சிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பெருந்தடை. 1978ம் ஆண்டின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் 10ம் பிரிவில் கூறப்பட்டுள்ள சிந்தனைச் சுதந்திரத்துக்கு முரணானது. தமிழீழ மக்களின் இறைமைக்கும் தாயகக் கோட்பாட்டிற்கும் முரணானது. மனித சிந்தனைக்கும் உரிமைக்கும் முரணானது.

### ஆறாவது சட்டத் திருத்தத்தின் அபாயங்கள்

ஆறாவது திருத்தச் சட்டத்தின் இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில், இச்சட்டத்தைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை அரசாங்கம்தான் ஒடுக்க வேண்டுமென்பதில்லை. எந்த ஒரு நபரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம். தனி அரசு நிறுவும் இலட்சியத்தைக் கொண்ட எந்த அமைப்பிற்கும் எதிராக எவரும் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அவ்வாறான வழக்கில் புலிகள் இயக்கத்தின் நோக்கங்களுள் ஒன்று தனியரசு நிறுவுவது என்று உயர் நீதி மன்றம் பிரகடனப்படுத்தினால், அந்த இயக்கம் தடை செய்யப்பட்டதாகக் கருதப்படும். உயர் நீதி மன்றப் பிரகடனத்துக்குப்பின் அத்தகைய இயக்கத்தின் உறுப்பினர்களாக, அலுவலர்களாகத் தொடர்ந்து இருப்போர் அனைவரும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தமது குடியியல் உரிமைகளையும் அசைவற்ற, அசைவுள்ள ஆதனங்களையும் இழப்பதுடன், மேலும் ஏழு ஆண்டுகளுக்குக் குடியுரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டு மத்திய அரசிலோ உள்ளூர் ஆட்சி அரசிலோ அல்லது அரச சார்பு நிறுவனங்களிலோ வாழ்க்கைத் தொழிலிருந்தால் அத்தகைய தொழிலையும் இழப்பர். சுருக்கமாகச் சொன்னால் அவர் நடைப்பிணமாக்கப்படுவர். இத்தகைய பயங்கரமான திருத்தச் சட்டத்தை அரசியல் அமைப்புத் திட்டத்தின் பிரிவாக வைத்துக்கொண்டு தமிழீழ மக்களை ''அரசியல் நீரோட்டத்தில்'' கலக்க வைப்பது முடியாததாகிவிடும்.

சட்டத்தை நீக்கவிடமாட்டோம் எனக்கூறும் கட்சிகள், தமது துரோகத்தால் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு தாமே பொறுப்பேற்க வேண்டி வரும்.

## ஒரு போராளியின் . . .

னின் இழப்பைத் தாங்க முடியாதிருந்தது. அந்தப் படையணிக்கே பசிலனின் இழப்பு தாங்க முடியாமல் இருந்தது. அதன் பின்பு அவர்கள் மிகக் கடுமையாகப் போரிட்டனர். மனதின் ஓலத்திற்கு இயங்கும் துப்பாக்கிகளின் ஓசையே சமாதானம் பேசிற்று.

15-12-1987 அன்று!

அவர்கள் சிலாவத்தைக் குளத்தின் பின்புறமாகக் காத்திருந்தார்கள். வெள்ளம் வடிந்த பின்பு காவலரண் ஒன்றைத் தாக்க வேண்டும் என்று காத்திருந்தார்கள். ஈரம் நிறைந்த சதுப்பு நிலத்தில் தவளைகளின் இராக்காலக்கத்தல்களுடனேயே அன்றைய இரவும் கழிந்தது.

விடிந்ததும் அவர்களுக்கு ஏமாற்றந்தான் காத்திருந்தது. அந்தக் காவல் நிலையம் ஆட்களற்று வெறுமையாக இருந்தது. ஆனாலும், ஓடிவந்த ஒருசிலர் ஒரு தகவலை மட்டும் சொல்லிவிட்டுச் சென்றனர்.

''அலம்பிலை நோக்கி ஆயிரக்கணக்கான படையினர் செல்கின்றனர்''.

இந்தியப் படையணியின் அந்தப் பட்டாளம், 4ம் கட்டையிலுள்ள வேதக் கோயிலடியில் நிலைகொண்டது. அவர்களது அன்றைய தங்கு நிலையம் அந்தத் தென்னந் தோட்டந்தான்போலும். புலிகள் இருபிரிவாக அவர்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். திருச்செல்வம் தனது அணியினருடன் கடற்கரைப் பக்கமாக அவ்விடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். ஏனோ தெரியவில்லை, அன்று அலைகளின் ஓசை அவனது மனதின் ஆசைகளைக் கிளறிக் கொண்டிருந்தது. அலைகளுக்குள் வாழ்ந்த அந்தப் பழைய வாழ்க்கையை ஒரு கணம் நினைத்துக் கொண்டான். ஒவ்வொருநாளும் கரையில் ஏறியவுடன் ஓடிவரும் அவனது தாயையும், தங்கையையும் நினைத்துக்கொண்டான். அந்நேரங்களில் அவர்களின் முகங்களில் தெரியும் சந்தோசமும், மகிழ்ச்சியும் .....

இராணுவத்தினரது நடமாட்டங்கள் கண்ணுக்கு நன்றாகவே தெரிந்தது. மந்துகள் நிறைந்த மரங்களுக்கு இடையால் அவர்கள் மறைந்து, மறைந்து முன்னேறிக் கொண்டிருந்தனர். இராணுவத்தினரை மிகவும் நெருங்கியவுடன் அவர்கள் நிலையெடுத்துக் கொண்டனர். இராணுவத்தினர் தொட்டுவிடும் தூரத்தில்தான்.

அது ஒரு மூர்க்கமான தாக்குதல், எம்மவரில் சிலர் ஆயிரக்கணக்கான எதிரிகளுடன் வீரமுடன் போரிட்டனர். அங்கே இராணுவத்தினரில் பலர் கொல்லப்பட்டனர்.

ஒரு புற்றின் மறைவிலிருந்து - திருச்செல்வம் தனது துப்பாக்கியை இயக்கிக் கொண்டிருந்தான் - எதிரி பலமாகவே இருந்தான் - ஆக்கிரமிப்பாளனின் துப்பாக்கிக் குண்டுகளில் ஒன்று திருச்செல்வத்தின் நெஞ்சைத் துளைத்துச் சென்றது. இந்த மண்ணையும், மக்களையும் நேசித்த ஒப்பற்ற ஜீவனொன்று, தன் தாய் நிலத்தில் முகம் புதைத்தது.

அலம்பில் கடற்கரை ஓரமாக அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள், அங்கே திருச்செல்வத்தைக் காணவில்லை. அவனைத் தாலாட்டி வளர்த்த அந்தக் கடலின் அலைகள் அவனைத் தேடின - காணாமல் கரையில் முட்டி மோதின - சோகத்தின் குமுறல் அந்த அலைகளிலும் தெரிந்தது.


கடற் தாய் மகனுக்கு வாழ்த்துப் பாடினாள்.


- வசந்தன்

www.eelamview.com


# வீர வணக்கம்


மேஜர் சுரேஸ்


மேஜர் மதி


மேஜர் கமல்


கப்டன் நேமி



கப்டன் குகன்


கப்டன மகேஸ்


கப்டன் ரகு

2-வது லெப் அசோக் சொனி
நவா சுரேஷ்

*6-2-90 அன்று திருகோணமலை - ஜமாலியா என்ற இடத்தில் ENDLF தேசத் துரோகிகளின் முகாம்மீது எம்மால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலை வெற்றிகரமாக முடித்துக் கடல் வழியாகத் தளம் திரும்பிக் கொண்டிருந்த எமது தோழர்கள் வந்து கொண்டிருந்த படகுகளில் இரண்டு, எதிர்பாராத விதமாகக் கடலில் மூழ்கியதால் எமது 22 தோழர்கள் வீரமரணம் அடைந்தனர்.*


கப்டன் அன்ரன்



லெப் கில்பேட்


லெப் கிருபன்,



2 வது லெப் சாந்தன்



விஜி



காந்தி


2 வது லெப் சங்கர்


குமார்


பைரவன்


சின்னமதி


கருணா

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com